JESUS REDEEMS MINISTRIES

# வாலிபர் உலகம்

மலர்: 12 | இதழ்: 12 | பிப்ரவரி | ஆண்டு சந்தா ₹100/




# உண்மையான அன்பு!

# INDEX


04 தனிமையிலும் கர்த்தரின் அன்பு...

12 எழுப்புதலில் பவுல்!

20 திருச்சபையின் எழுப்புதல்!

29 தேவ அன்பு...


வாலிபர் உலகம்

**இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனி எங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!**

இப்பத்திரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன் SMS மூலமாகவோ Whats app மூலமாகவோ **9750955547** என்ற எண்ணிற்கு தெரியப்படுத்துங்கள்

**வாலிபர்களே! உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் மிகுந்த மாற்றத்தைக் கொண்டு வரும் இப்பத்திரிக்கையை நீங்கள் தவறாமல் வாசியுங்கள். நீங்கள் வாசித்தபின் இப்பத்திரிக்கையை உங்கள் நண்பர்களுக்கும் வாசிக்கக் கொடுங்கள்!**

## 30,000 வாலிபர்கள் கையில் தவழும் வாலிபர் உலகம் பத்திரிகை உங்கள் கையில் உள்ளதா?

அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். உங்கள் சந்தா தேதி முடியும் நிலையில் இருந்தால் உடனே உங்கள் **சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள்!** Mo/ Cheque / DD "Jesus Redeems Youth Ministry" என்ற பெயரில் தூத்துக்குடி அல்லது திருநெல்வேலி கிளை பெயரில் எடுத்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு உங்கள் சந்தாவை அனுப்பவும். நீங்கள் பணம் செலுத்திய பின்பு, உங்களது பெயர், முகவரி மற்றும் ரசீதை **9750955547** என்ற எண்ணிற்கு தெரியப்படுத்துங்கள்.

| | |
|---|---|
| A/c. Name | : JESUS REDEEMS YOUTH MINISTRY |
| A/c. No. | : 054100710400515 |
| BANK | : TAMILNAD MERCANTILE BANK LTD., |
| BRANCH CODE | : Prahasapuram, Nazareth |
| BRANCH CODE | : 000054 |
| IFS CODE | : TMBL0000054 |
| MICR CODE | : 627060021 |
| SWIFT CODE | : TMBLINBBTUT |


**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**
நாலுமாவடி, தூத்துக்குடி – 628 211.
Phone: 04639-353333
Cell:9750955547
youth@jesusredeems.org
www.jesusredeems.com
www.youthworld.in



**ஆசிரியர்:** மோகன் சி. லாசரஸ் **இணை ஆசிரியர்:** அவினாஷ் **ஆசிரியர் குழு:** ஜிஷ்யா | ரேச்சல் | கிளாடிஸ் ரவி | சுமா | கெத்சி | காலேப் | வயலா | சதீஷ் | ரேச்சல் செல்வகுமார் | ரெபேக்கா
**வடிவமைப்பு:** ஜாஷ்வா | **நிர்வாகம்:** பெனீட்டா | ஜெயா

தலைவாசல்

# அன்பைத் தேடி...

அன்பான இளம் நெஞ்சங்களுக்கு
அன்பின் வாழ்த்துக்கள்!



அன்பு என்ற வார்த்தையை எல்லோரும் பயன்படுத்துவோம். ஆனால் அன்பு என்ற வார்த்தையை விவரிக்க சொன்னால் அநேகரால் முடியாது. அன்பு என்றாலே தாயின் அன்பு, உறவுகளின் அன்பு, மேலும் வாலிபர்கள் அதை நேசம் என்றும் கூறுவார்கள். இன்றைக்கு இந்த அன்பிற்காகவும், அன்பைத் தேடியும் தான் ஒரு கூட்டம் ஓடிக் கொண்டிருக்கிறார்கள். அதில் ஒரு சில வாலிபர்கள் அன்பை தன் சக மாணவர்களிடம் தேட அது நட்பு என்ற போர்வையில் காதலாய் மாறுகிறது. மேலும் ஒரு சில வாலிபர்கள் அன்பைத் தேடி ஆன்மீகத்திற்குள் சென்று மீண்டும் எழும்ப முடியாத அளவிற்கு மூழ்கிப் போகிறார்கள்.

எல்லா செய்தித்தாள்களிலும், ஊடகங்களிலும் வருகின்ற தற்கொலை, கொலை, வன்முறை சம்பவங்கள் அனைத்தும் இந்த அன்பைத் தேடி சென்றதாலும், அன்பு இல்லாமல் போனதாலுமே என்று சொல்லலாம்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக பள்ளிக்கூடங்களில் ஏற்படும், பாலியல் கொடுமைகளும் ஆன்லைன் வகுப்புகள் என்ற முறையில் ஏற்படும் அவலங்கள் அனைத்திற்கும் இன்றைய வாலிப சமுதாயம், தவறான அன்பைத் தேடி ஓடிக்கொண்டிருக்கின்றனர் என்பதை வெளிப்படுத்துகிறது.

இத்தனை மரணங்களும் நம்மை சுற்றிதான் நடக்கிறது. அவற்றை நாம் ஒரு செய்தியாய் பார்த்து கடந்து போவோமானால், ஆத்துமாக்களுக்கான பாரம் எங்கே?

இயேசுவின் அன்பை அறியாமல், மனம் உடைந்து மடியும் ஒவ்வொரு வாலிபனின் மரணத்திற்கும் யார் பொறுப்பு ஏற்பது? அவர்கள் மரணத்திற்கு காரணம் அவர்களின் அறியாமையும், பாவமும், சமுதாயமும், அதிகாரமும் என்று எளிதாக சொல்லி விட்டு, எத்தனை நாட்கள் தான் பொறுப்பு இல்லாமல் இருக்கப் போகிறோம்!.

**இயேசுவை அறிந்த உன்னுடைய பொறுப்புதான் என்ன?**

“நாம் எழும்பும் வரை நற்செய்தியின்றி, நம் தேசம் பாழாய் போய்க் கொண்டிருக்கிறது” என்பதை நீ நன்கு அறிந்த போதும்,

**உன்னுடைய ஜெபத்தின் தீவிரம் எங்கே?**

**நற்செய்தி சொல்லும் வேகம் எங்கே?**

**வாலிபனே! உன் கண்களை ஏறெடுத்து பார்!**

உண்மையான அன்பிற்காக ஏங்கி தவிக்கும், திசை தெரியாது திகைக்கும், அந்த வாலிப கூட்டம், அன்பைத் தேடி கால் வலிக்க நடக்கும் உன் நண்பனுக்கும், அன்பு தோழிக்கும், தன் இரத்தத்தை சிந்தி தன் அன்பை வெளிப்படுத்திய,

**இயேசுவின் அன்பை சொல்ல எப்பொழுது உன் வேகத்தையும்; வைராக்கியத்தையும் காண்பிப்பாய்!** ♥



கிறிஸ்துவின் பணியில்
அவினாஷ்

# தனிமையிலும் கர்த்தரின் அன்பு...



சாட்சி: ஜிஷ்யா

கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்த சகோதரி சுகிர்தாவின் வாழ்க்கையில் எத்தனையோ விதமான பாடுகள் வந்த போதிலும், அவற்றை இயேசுவின் துணையோடு எப்படி மேற்கொண்டார் என்பதையும், இன்றைக்கு இவர்களை தேவன் ஊழியத்தில் எப்படி பயன்படுத்துகிறார் என்பதையும் அவர்களே நம்மோடு பகிர்ந்து கொள்கிறார்கள்...

**ஹாய்... சுகி... உங்களது சிறுபிராயம் மற்றும் குடும்பம் பற்றி சொல்லுங்களேன்?**

நான் திரு. செல்வராஜ், திருமதி எஸ்தர் ராணி தம்பதியருக்கு மூத்த மகளாக பிறந்தேன். எனக்கு ஜாஸ்மின் லிடியா என்ற தங்கை இருக்கிறாள். நாங்கள் தென்காசி மாவட்டம் ஆலங்குளத்தில் வசித்து வருகிறோம். நான் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து வளர்க்கப்பட்டேன். என் அம்மா மிகவும் தேவ பக்தியுள்ளவர்களானபடியால் எங்களை கிறிஸ்தவ பாரம்பரியத்தில் வளர்த்தார்கள். எனது சிறு வயதிலேயே என் பெற்றோர் என்னை ஊழியத்திற்கு ஒப்புக்கொடுத்துள்ளார்கள். ஆனால் நான் அந்த பயத்துடன் வளரவில்லை. ஆலயத்திற்கு ஒழுங்காக சென்று வருவேனேத் தவிர, தினமும் வேதம் படிப்பது, ஜெபிப்பது என்பது எனது சிறுவயதில் இல்லை. என் அம்மா கட்டாயப்படுத்தி திட்டும் போது மட்டும் வேதத்தை எடுத்து வாசிப்பேன். கர்த்தருக்கும் எனக்கும் எந்த உறவும் இல்லை. ஆனால் என் சிறு வயதிலேயே அநேக ஆபத்துகளிலிருந்து கர்த்தர் என்னை காப்பாற்றி வந்தார் என்று என் தாயார் சொல்லி எனக்குத் தெரியும்.


சுகிர்தா தன் குடும்பத்துடன்

**சிறுவயதிலேயே அப்படி என்ன ஆபத்திலிருந்து காப்பாற்றப்பட்டீர்கள்?**



நான் சிறுபிள்ளையாக இருக்கும் போது, ஒரு பெரிய தண்ணீர் தொட்டியில் விழுந்து விட்டேன். நான் விழுந்ததை யாரும் பார்க்கவில்லை, என்னால் ஏற முடியாது. கொஞ்ச நேரத்தில் மூச்சு திணற ஆரம்பித்தது. ஆனால் எப்படியோ படிக்கட்டிற்கு அருகில் வந்து தொட்டியிலிருந்து ஏறி வந்தேன். தேவன் என்னை அப்போது அந்த ஆபத்திலிருந்து காப்பாற்றினார். இப்படி அநேக முறை காப்பாற்றப்பட்டிருக்கிறேன்.

**ஓகே... சிறுவயதில் ஆபத்திலிருந்து தேவன் உங்களை காப்பாற்றினார். நீங்கள் சிறுவயதில் ஆண்டவருக்கு பிரியமுள்ள மகளாகத் தான் வாழ்ந்தீர்களா?**

இல்லை... நான் 8ம் வகுப்பு படிக்கும் வரை யாருக்கும் கீழ்படிவதில்லை, அதிகமாக கோபப்படுவேன், எனக்கு ஒரு பொருள் பிடித்திருந்தால் அந்தப் பொருளை எப்படியாவது அடம்பிடித்து வாங்கி விடுவேன். ஆனால் சிறுவயதிலேயே தேவன் என்னை முன்குறித்து வைத்திருக்கிறார் என்பதை அநேக வருடங்களுக்குப் பிறகு தெரிந்து கொண்டேன்.

**சரி... ஆண்டவருக்கு பிரியமில்லாமல் வாழ்ந்து வந்தீர்கள்... எப்போது இயேசுவை அறிந்து கொண்டீர்கள்?**

நான் 9வது வகுப்பு படிக்கும் போது, எங்கள் ஆலயத்திலிருந்து வாலிப பிள்ளைகளாக இணைந்து வாலிபர் கூடுகைக்கு சென்றனர். அப்போது நானும் விருப்பமில்லாமல் சென்றேன். அக்கூடுகை மிகவும் ஜாலியாக இருந்ததால் மிகவும் கவனமாக செய்தியைக் கேட்கும்பொழுது, ‘‘முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்’’ என்ற வார்த்தை என்னை தொட்டது. இயேசுவிடம் என் பாவத்தை அறிக்கை செய்து ஜெபித்தேன். உடனே என் இருதயத்தில் ஒரு மாற்றத்தை உணர்ந்தேன். அதன்பிறகு என்னுடைய குணங்களில் மாற்றம் உண்டானது. தொடர்ந்து நான் கொஞ்சம் கொஞ்சமாக இயேசுவைத் தேட ஆரம்பித்தேன்.



கொஞ்ச நாட்களுக்குப் பிறகு எனது அப்பா சிறுநீரக கல் வியாதியினால் பாதிக்கப்பட்டு மிகவும் முடியாத நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அப்பொழுது நான் என் தகப்பனாரின் சுகத்திற்காக ஜெபித்தேன். என் ஜெபத்தைக் கேட்டு, கல் இருந்த இடம் தெரியாமல் கரைந்து போனது. என் ஜெபத்தை இயேசப்பா கேட்டார் என்றதும் எனக்குள் ஒரு சந்தோஷமும் மகிழ்ச்சியும் பெருகியது. அதன் பிறகு நான் தினமும் ஜெபிக்க ஆரம்பித்தேன். வேதத்தையும் தொடர்ந்து வாசிக்க ஆரம்பித்தேன். 10ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு படிக்கும் வரை ஒரே ஒரு முறை தான் முழு வேதாகமத்தை படித்து முடித்தேன். ஏனென்றால் கொஞ்சம் கொஞ்சமாகத் தான் வாசிப்பேன். 12ம் வகுப்பு படித்து முடித்தவுடன் VBS Director Training-க்காக சென்றிருந்த போது, ஊழியத்திற்கு என்னை முழுவதுமாக ஒப்புக்கொடுத்தேன். அதன்பிறகு ஊழியம் செய்வதற்கான வாய்ப்புகள் கிடைத்தது. FMPB ஜெபக்குழுவில் இணைந்து ஜெபிக்கவும் கர்த்தர் கிருபை கொடுத்தார். இப்படி என் ஆவிக்குரிய வாழ்வில் வளர ஆரம்பித்தேன்.

**இயேசுவை ஏற்றுக்கொண்டீர்கள்... ஊழியம் செய்ய ஆரம்பித்தீர்கள்... உங்களுடைய கல்லூரி வாழ்க்கை எப்படி இருந்தது?**

நான் மிகவும் நன்றாகப் படிப்பேன் என்று சொல்ல முடியாது. சுமாராகப் படிப்பேன். 12ம் வகுப்பு முடித்து கல்லூரிக்கு சென்றேன். 2 வருடங்கள் ஆண்டவருக்கும் எனக்கும் நல்ல ஐக்கியம் இருந்தது. 3வது வருடம் படிக்கும்போது, இயேசுவை விட்டு பின்மாற்றத்திற்குள் சென்றேன். அநேக பாவங்களை செய்ய ஆரம்பித்தேன். சினிமா பார்ப்பது, ஜெபிக்காமல் தோழிகளோடு இணைந்து டான்ஸ் ஆடுவது என்று செம ஜாலியாக எனது வாழ்க்கை மாறியது. நான் செய்வது பாவம் என்று எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் அதை செய்யக்கூடாது என்று நினைப்பேன். ஆனால் என்னைத் தொடர்ந்தது. கல்லூரி முடிப்பதற்கும் ஒரு மாதத்திற்கு முன்பு, என்ன ஒரு வாழ்க்கை என்று என் மீது எனக்கு ஒரு பெரிய வெறுப்பு ஏற்பட்டது. அப்படி ஒரு வெறுமையான உணர்வு எனக்குள் வந்ததும் இயேசுவை தேட ஆரம்பித்தேன். மீண்டும் இயேசுவிடம் மன்னிப்புக் கேட்டு ஆண்டவரை ஏற்றுக் கொண்டேன்.

**சூப்பர்... பின்மாற்றத்திலிருந்த உங்களுக்கு ஒரு வெறுமையை உண்டாக்கி, மறுபடியும் கர்த்தர் பக்கம் திரும்ப வைத்தார்... சரி, அதன்பிறகு உங்களது ஆவிக்குரிய வாழ்க்கையில் என்னென்ன மாற்றங்கள் உண்டானது?**

சொல்றேன்... மறுபடியும் இயேசுவின் பக்கமாய் வந்து 6 மாதத்திற்கு பிறகு 2018ம் வருடம் ஜனவரி மாதம் எங்கள் சபையில் அபிஷேகத்தைக் குறித்தும், அதன் நன்மைகளைக் குறித்தும் ஒரு ஊழியக்காரர் பேசினார். அப்போது அபிஷேகத்தைக் குறித்து தெரிந்து கொண்டேன். அடுத்த நாள் ஒரு முழு இரவு ஜெபத்திலும் அந்நிய பாஷை அபிஷேகத்தைப் பற்றி பேசினார்கள். அப்போது எனக்கு ஒரு தெளிவு கிடைத்தது. நானும் அந்த அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டு மென்று வாஞ்சித்து ஜெபித்தேன். கர்த்தர் என் வாஞ்சையைப் பார்த்து அந்தக் கூடுகையிலேயே என்னை அபிஷேகித்தார். எந்த தகுதியும் இல்லாத என்னை தேவன் தெரிந்து கொண்ட அவரது அன்புக்கு என்ன செய்வது என்று யோசித்தேன். அப்போது ஆண்டவரே, என்னோடு சேர்ந்து ஜெபிக்க யாரையாவது கொடுங்கள் என்று ஜெபித்த போது, எனக்கு அறிமுகமில்லாத 4 சகோதரிகளை கர்த்தர் காண்பித்து அவர்களோடு இணைந்து ஜெபிக்க ஆரம்பித்தேன். அதன்பிறகு சிறு பிள்ளைகள் மத்தியில் ஊழியம் செய்வதற்கான வாய்ப்பு வந்தது. ஒவ்வொரு வாரமும் 15 பிள்ளைகளுக்கும் மேல் Sunday School எடுக்க கர்த்தர் கிருபை கொடுத்தார்.



**சரி... ஊழியம் செய்ய ஆரம்பித்தீர்கள்... உங்களுடைய குடும்ப சூழ்நிலை எப்படி இருந்தது? உங்களால் ஊழியம் செய்ய முடிந்ததா?**

2020ஆம் ஆண்டில் எனது தாயார் மிகவும் பாதிக்கப்பட்டு குடும்பமே கஷ்டமான சூழலில் காணப்பட்டோம். கண்ணீர், தனிமை, கஷ்டங்கள் என பல பாடுகள் என் வாழ்வில் வந்தது. அந்தப் பாடுகளின் மத்தியிலும் நான் ஊழியம் செய்து கொண்டிருந்தேன். பாடுகளின் மத்தியிலும் தேவன் என்னை உருவாக்கினார். இந்த சூழ்நிலையில் 2020 ஆகஸ்ட் மாதம் என் தாயார் மரணமடைந்தார்கள். கர்த்தர் என்னையும் என் சகோதரியையும் தேற்றினார். ஆண்டவரே என் வாழ்வில் மட்டும் ஏன் இப்படி நடக்கிறது, நான் உங்களுக்காக ஊழியம் செய்கிறேனே, ஏன் என்று என் மனதில் நிறைய கேள்விகளோடு இருந்தேன். அந்த



நேரத்தில் Igniters Camp-ல் கலந்து கொண்டேன். அப்போது, ஆண்டவருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுப்பது தான் கிறிஸ்தவ வாழ்க்கை என்று மோகன் அங்கிளின் சாட்சி மூலமாக கர்த்தர் என்னோடு பேசினார். அதன் பிறகு என்னை முழுவதுமாக ஊழியத்திற்கு ஒப்புக்கொடுத்தேன். ஆண்டவரை சார்ந்து வாழ தீர்மானித்தேன். நான் ஏதாவது ஒரு கஷ்டத்தோடு ஒரு சொட்டு கண்ணீர் என் கண்ணிலிருந்து வந்தாலும் உடனே இயேசு என்னோடு அன்பாக பேசுவார். தாயின் அன்புக்காக ஏங்கும் போது, ஒரு தாயைப் போல என்னை அரவணைத்து நடத்தி வருகிறார். அவருடைய மாறாத அன்புக்காக, இனியும் ஆண்டவருக்கு ஏதாவது செய்ய வேண்டுமென்ற வைராக்கியத்தோடு, என்ன பாடுகள் வந்தாலும் கடைசி வரை ஊழியம் செய்வேன் என்று ஒப்புக்கொடுத்தேன்.

**சூப்பர்... ஆண்டவர் உங்களோடு பேசினார்... அதன் பிறகு நீங்கள் ஊழியம் செய்தீர்களா? படித்தீர்களா?**

நான் கல்லூரி படித்து முடித்தவுடன் B.Ed– படிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டேன். ஆனால் என் தாயாரின் பெலவீனத்தின் நிமித்தமும், படிப்பதற்கான பண வசதியும் இல்லாததினால் படிக்காமல் இருந்தேன். இந்த சூழ்நிலையில் ஒரு ஊழியக்காரர் மூலமாக நீ படிக்க வேண்டும், கர்த்தர் உன்னை உயர்த்துவார் என்று பேசினார். உடனே இயேசப்பா நான் கல்லூரி முடித்தவுடன் படிக்க ஆசைப்பட்டேன், முடியவில்லை. இப்போது எப்படி என்னால் படிக்க முடியும். அப்படியானால் இந்த வருடத் திற்குள் நீங்கள் தான் என்னை படிக்க வைக்க வேண்டும் என்று விசுவாசத்தோடு ஜெபிக்க ஆரம்பித்தேன். 2021 பிப்ரவரி மாதம் ஆகிவிட்டதால் எந்த கல்லூரியிலும் அட்மிஷன் கிடைக்காது. கர்த்தர் எனது ஜெபத்தைக் கேட்டு வாசலைத் திறந்து கொடுத்து B.Ed கல்லூரியில் சேர்ந்து படிக்க கிருபை செய்தார். என் கையில் ஒரு காசும் கிடையாது. ஆனால் கல்லூரிக்கு தேவையான ரூபாய் ஐம்பதாயிரத்தை தெரியாத நபர் மூலமாக எனக்கு கிடைக்க வைத்து, என்னை ஆச்சரியமாக நடத்தினார். 2022ம் ஆண்டு ஜூன் மாதம் என் B.Ed - படிப்பை படித்து முடிக்கவுள்ளேன்.



கர்த்தர் என் ஆசையை விருப்பத்தை நிறைவேற்றி வருகிறார்.

**இத்தனை பாடுகள் மத்தியிலும் ஆண்டவர் உங்களை படிக்க வைத்தார்? ஆண்டவருக்காக என்ன செய்கிறீர்கள்?**

Igniters Camp வந்த பிறகு ஆண்டவர் எனக்கு இன்னும் அதிகமான ஊழியத்தைக் கொடுத்தார். மாதந்தோறும் நடைபெறும் Igniters Fellowship-க்கு சென்று இன்னும் ஆவிக்குரிய வாழ்வில் பெலப்பட்டேன். கர்த்தர் ஊழிய வாய்ப்புகளை கொடுத்தார். கிராம ஊழியம், வாலிபர் ஊழியம், சிறுவர் ஊழியங்களை செய்து வருகிறேன். கர்த்தர் என்னை கிருபையாய் நடத்தி வருகிறார். திருமணத்திற்காக ஜெபித்த போது, கர்த்தர் எனக்கு இரட்சிக்கப்பட்டு கர்த்தருக்கு ஊழியம் செய்யும் நபரை கொடுத்திருக்கிறார். என் திருமண காரியத்திலும் கர்த்தர் அவருடைய சித்தத்தின்படியே எல்லாவற்றையும் செய்கிறார்.

**வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

வாலிபர்கள் தங்கள் வாழ்க்கையை இயேசுவுக்கு ஒப்புக்கொடுக்கும் போது, எல்லா வேளைகளிலும் கர்த்தர் வழிநடத்துவார். பாவம் செய்ததினால் இயேசு என்னை ஏற்றுக்கொள்வரா என்ற குழப்பமே வேண்டாம். எவ்வளவு பெரிய பாவமாக இருந்தாலும், பாவம் செய்து விட்டோம் என்ற உணர்வு வந்தவுடன், இயேசுவிடம் மன்னிப்பு கேட்டு ஒப்புரவாகுங்கள். கர்த்தர் பாவங்களை மன்னித்து ஏற்றுக் கொள்வார். பாவம் செய்து விட்டோமே என்ற குற்றவுணர்வுடன் வாழ்க்கை வாழாமல் மன்னிக்கும் தேவனை சார்ந்து நிற்கும் போது, கர்த்தர் எல்லாவிதத்திலும் உங்களுக்கு உதவி செய்வார்.

**அன்பான வாலிபர்களே! அருமை சகோதரி ஏஞ்சலின் சொர்ண சுகிர்தாவின் வாழ்க்கையில் எத்தனையோ விதமான பாடுகள், சூழ்நிலைகள் வந்த போதிலும், தனிமையிலும் கர்த்தரை சார்ந்து நின்ற போது, கர்த்தரின் அன்பு சுகிர்தாவோடு இருந்தது போல உங்களோடும் இருப்பார் ❤**

வேத ஆய்வு: ரேச்சல்



# ஏசாயா

## (ஆண்டவரின் இரட்சிப்பு)

அன்பான இளம் நெஞ்சங்களே! கடந்த மாதங்களில் கவிதை நூல்களைப் பற்றி கண்டோம். இந்த மாதமும் பெரிய தீர்க்கதரிசிகள் நூல்களில் முதல் புத்தகமான 'ஏசாயா' பற்றி சுருக்கமாகக் காணலாம்.

### அறிமுகம்

ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகம் ஒரு சிறிய வேதாகமம் போல் விளங்குகிறது.
இதில் 66 அதிகாரங்கள் உள்ளன. ஏசாயா புத்தகத்தின் முதல் 39 அதிகாரங்கள் பழைய ஏற்பாட்டிலுள்ள 39 நூல்களுக்கு ஒப்பாயிருக்கிறது. இவைகள் வரப்போகும் மேசியாவை எதிர்நோக்கியிருப்பதை கூறுகின்றன. இதன் கடைசி 27 அதிகாரங்கள், 27 புதிய ஏற்பாட்டு கடைசி நூல்களுக்கு ஒப்பாயிருக்கிறது. முதல் 39 அதிகாரங்கள் மனிதனுக்கு அதிமுக்கிய தேவையான இரட்சிப்பைப் பற்றியும், 40-66 அதிகாரங்கள் மேசியாவிலும், அவரது இராஜ்யத்திலும் உள்ள தேவனுடைய ஈவாகிய இரட்சிப்பை வெளிப்படுத்துகின்றன.

ஆசிரியர்: ஏசாயா
காலம்: கி.மு. 740 கி.மு. 680
அதிகாரங்கள்: 66
வசனங்கள்: 1,292
வார்த்தைகள்: 37,044

### முக்கிய நபர்கள்:

'ஏசாயா' முக்கிய கதாபாத்திரமாவார். ஆயினும் தேவனே இஸ்ரவேலின் தலைசிறந்த வல்லவராகவும், இஸ்ரவேலின் பரிசுத்தராகவும், சேனைகளின் தேவனாகவும் படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளார்.

## ஏசாயா – சுருக்கம்

### நியாயத்தீர்ப்பு மற்றும் எச்சரிப்பு பற்றிய தீர்க்கதரிசனங்கள்

- யூதேயாவிற்கு எதிரான தீர்க்கதரிசனங்கள் (1-12 அதி.)
- புறஜாதியாரைக் குறித்த தீர்க்கதரிசனங்கள் (13-23 அதி.)
- கர்த்தரின் வருகையைக் குறித்த தீர்க்கதரிசனங்கள் (24-27 அதி.)
- யூதேயா, இஸ்ரவேலுக்கு எதிரான தீர்க்கதரிசனங்கள் (28-35 அதி.)
- சனகெரிப்புக்கு எதிரான தீர்க்கதரிசனங்கள் (36-39 அதி.)

### ஆறுதல் மற்றும் ஆசீர்வாதமான தீர்க்கதரிசனங்கள்

- இஸ்ரவேலின் மீட்புக்கான தீர்க்கதரிசனமும், சர்வ வல்ல தேவனின் சிறப்பும் (40-48 அதி.)
- இஸ்ரவேலரை மீட்பவரைப் பற்றிய தீர்க்கதரிசனமும், உபத்திரவப்படும் ஊழியரின் மீட்பும் (49-57 அதி.)
- இஸ்ரவேலரின் மகிமையான எதிர்காலம் பற்றிய தீர்க்கதரிசனமும் சமாதானம் குறித்து ஆண்டவர் தீர்மானங்களும் (58-66 அதி.)

### ஏசாயாவில் கிறிஸ்து

பழைய ஏற்பாட்டில் எந்த ஒரு புத்தகத்திலும் ஏசாயா சொன்னது போல இயேசு கிறிஸ்துவைப் பற்றி இவ்வளவு விரிவாக சொல்லப்படவில்லை ஆனால் ஏசாயாவில் கிறிஸ்துவின் மேலான வல்லமை (6:1); அவரது பிறப்பு, மனுஷீகம் (7:14, 9:6, 11:1); அவருடைய ஊழியம் (11:2); அவருடைய தெய்வீகம் (7:14, 9:6); அவருடைய தாவீதின் வம்சவழி (11:1); மீட்பின் வேலை (53); தாழ்மையான இரட்சகராக (49-52); அவரது ஊழியம் ஆகியவைப் பற்றி அதிகமாகவும் கூறப்பட்டுள்ளது ❤

ஆலோசனை: அலி

# மாறாத அன்பு!



நான் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து சிறுவயதிலிருந்தே என் பெற்றோர் ஆவிக்குரிய வாழ்வில் என்னை வளர்த்தார்கள். ஆலயங்களில் நடக்கும் எல்லா போட்டிகளிலும் கலந்து கொள்வேன். 12ம் வகுப்பு படிக்கும்போது இயேசுவை அறியாத ஒரு நபரோடு பழக்கம் ஏற்பட்டு நட்பாக பேச ஆரம்பித்து நாளடைவில் அது காதலாக மாறியது. கல்லூரிப் படிப்பை படிக்கும் வரை எங்களது காதல் யாருக்கும் தெரியாமல் வளர்ந்து கொண்டிருந்தது. ஆலயத்திற்கு தவறாமல் செல்வேன். தற்போது எனக்கு 23 வயதாவதால் மாப்பிள்ளை பார்க்க ஆரம்பித்தார்கள். நான் எனது காதலை பெற்றோரிடம் சொன்ன போது, என் பெற்றோர் என் காதலை ஏற்றுக்கொள்ளவில்லை. இரட்சிக்கப்பட்டு ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்த உன்னை இயேசுவை அறியாத நபருக்கு திருமணம் செய்து கொடுக்க முடியாது என்று சொன்னார்கள். என்னால் அந்தக் காதலை மறக்கவோ, மறுக்கவோ முடியாது என்பதால் இயேசுவை மறுதலித்துவிட்டு, பெற்றோரின் பேச்சை கேட்காமல் அவனையே திருமணம் செய்து கொண்டேன். என் காதலனின் அன்பு தான் முக்கியம் என்று இயேசுவின் அன்பை உதறிவிட்டு சென்ற நான், எந்த சந்தோஷமும் நிம்மதியும் இல்லாமல் தவிக்கிறேன். திரும்பவும் இயேசுவின் பக்கம் வந்தால் இயேசுவின் அன்பு எனக்கு கிடைக்குமா? நான் எதிர்பார்த்த அன்பு என் கணவரிடமிருந்து கிடைக்கவில்லை. மிகவும் கலங்கி நிற்கிறேன். நான் என்ன செய்வது?

-ஷோபியா, மும்பை.

அன்பு சகோதரி ஷோபியா! உங்களின் கடிதம் படிப்பதற்கு சற்று வேதனையாக இருந்தாலும், மறுபக்கம் சாத்தான் உங்களை வஞ்சித்து, ஏமாற்றி, உங்கள் வாழ்க்கையை சீரழித்து விட்டதை பார்க்கும் போது பெரும் வேதனையைத் தருகின்றது.

ஷோபியா! இயேசுவின் அன்பை அறியாத அநேக வாலிப தங்கைகள், உலக அன்பை பின்பற்றி போகலாம். ஆனால் இயேசுவின் அன்பை அறிந்த, ருசித்த நீங்கள் எப்படி அவர் அன்பை மறக்க முடியும், மேலும் மறுதலிக்க முடியும் என்று தெரியவில்லை.



ஷோபியா, நீங்கள் இயேசுவை எவ்வளவு தான் மறந்து, வெறுத்து விட்டு போனாலும் அவரின் அன்பு ஒரு போதும் மாறாது. அவருக்கு உங்கள் மேல் இருக்கும் அன்பு குறையாது.

ஆனால் அவரை விட்டு சென்றதால் உங்கள் வாழ்வில் தற்பொழுது ஏற்பட்ட காயத்தின் தழும்புகள் உங்களுக்கு மறக்க முடியாத நினைவாய் இருக்கும்.

எனவே தற்பொழுது தங்கள் அனுபவித்துக் கொண்டிருக்கும் வேதனைக்கு நீங்கள் உங்கள் பெற்றோருக்கு கீழ்ப்படியாததும், தேவன் மீது வைத்திருந்த அன்பும் வைராக்கியமும் தணிந்து போனதே காரணம். ஆனால் இயேசுவை நீங்கள் மறுதலித்த பிறகும் அவர் உங்களை நேசிக்கிறார் என்பதே உங்களுக்கான ஓர் நற்செய்தி. அவரோடு உங்களின் உறவை மறுபடியும் புதுப்பிக்க வாய்ப்பு உண்டு. ஆண்டவரே உம்மை மறுதலித்து விட்டேன் என்னை மன்னியும் என்று உண்மையாக மனம் திரும்பும் போது இயேசுவோடு உள்ள உறவு புதுப்பிக்கப்பட வாய்ப்பு உண்டு. இயேசு என்னைப் போன்ற பாவியை மன்னிப்பாரா? நான் அவருக்கு செய்த துரோகத்தை மன்னித்து என்னையும் அவர் பிள்ளையாக ஏற்றுக் கொள்வாரா என்று தானே யோசித்து திகைத்து நிற்கிறீர்கள்.

இயேசுவுக்கு துரோகமும், மறுதலிப்பும் புதியது அல்ல. அவரோடு கூட வாழ்ந்து, ஊழியம் செய்து, அவரால் பல அற்புதங்களை ருசி பார்த்த சீஷனாகிய பேதுருவே, அந்த இயேசுவை எனக்குத் தெரியவேத் தெரியாது என்று சபிக்கவும், சத்தியம் பண்ணவும் தொடங்கினான் என்று வேதம் கூறுகிறது. மேலும் தன்னுடைய சொந்த தொழிலுக்கு மீன்பிடிக்க சென்று விட்டனர் என்றும் வாசிக்கிறோம். ஆனால் இயேசு பேதுருவை வெறுக்கவில்லை, மறக்கவில்லை, மறுதலிக்கவும்



இல்லை. இயேசு மறுபடியும் பேதுருவிடம் சென்று தன் மீது வைத்த அன்பை புதுப்பித்தார். என்மீது உனக்கு உண்மையான அன்பு உண்டா என்று மூன்று முறை கேட்டு, அவனுடைய அன்பின் குறையை உணர்த்தி, அவனை உருவாக்கி, ஒரு பாறையாக மாற்றி, இந்த கல்லின் மேல் என் சபையை கட்டுவேன் என்று அவனை ஆசீர்வதித்து உயர்த்தினார். அதேபோல் உங்கள் மறுதலிப்பையும் மன்னித்து, உங்களோடு புதிய ஒரு உறவை துவங்குவார். ஆனால் உங்களுடைய வாழ்க்கை தான் உங்கள் கணவர் இரட்சிக்கப்பட ஏதுவாக இருக்கும். உங்களுடைய சிறந்த நடக்கையே உங்கள் கணவரை இரட்சிக்கும்.

**உங்களின் வாழ்வில் நீங்கள் இழந்த அன்பை, சமாதானத்தை குடும்பத்தில் மீண்டும் பெற சில வழிகளை கடைபிடியுங்கள்...**

❤ எந்த வேதத்தை வேண்டாம் என்று ஒதுக்கினீர்களோ, அதே வேதம் தான் உங்கள் வாழ்க்கையின் சூழ்நிலையை மாற்ற முடியும் என்று நம்ப வேண்டும்.

❤ தேவனை அறியாத புருஷன், பயபக்தியோடு கூடிய உங்கள் (மனைவியின்) கற்புள்ள நடக்கையைப் பார்த்து, போதனையின்றி மனைவியின் நடக்கையினாலேயே ஆதாயப் படுத்திக் கொள்ளப்படுவார்கள் என்று 1 பேதுரு 3:1,2ம் வசனங்கள் சொல்கிறது. எனவே உங்களின் வாழ்க்கை அவருக்கு இயேசுவின் அன்பை வெளிப்படுத்த வேண்டும்.


❤ உங்களின் ஆவிக்குரிய வாழ்க்கையை பெலப்படுத்திக் கொள்ள அனுதினமும் வேதம் வாசித்து, ஜெபம் செய்யுங்கள். நல்ல ஒரு ஆவிக்குரிய சபைக்கு செல்ல வாய்ப்பு இருந்தால் செல்லலாம் அல்லது ஆன்லைனில் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு உங்களை பெலப்படுத்திக் கொள்ளுங்கள். அப்பொழுது தான் அனைத்து சவால்களையும் சமாளிக்க முடியும்.

❤ மேலும் உங்களின் தவறை உணர்ந்த நீங்கள் உங்கள் பெற்றோருடன் ஒப்புரவாகி, அவர்களிடமும் மன்னிப்பு கேட்டு, உங்கள் குடும்ப உறவை புதுப்பித்துக் கொள்ளுங்கள். அதன் மூலம் உங்கள் பெற்றோருக்கு ஆறுதலும், உங்களுடைய மனதின் வேதனையை பகிர்ந்து கொள்ள வாய்ப்பும் இடமும் உண்டாகும்.

❤ கணவருடைய இரட்சிப்புக்காக ஜெபியுங்கள். தேவன் நிச்சயம் பதில் கொடுப்பார். தேவன் விரும்பும் குடும்பமாக மாற முற்படுங்கள் ❤




நாம் வாழும் உலகில் அன்பு, பாசம், நேசம் இவை எல்லாம் ஒரு கானல் நீரைப் போல சில நிமிடங்களில் மறைந்து விடுகிறது. இன்று ஒவ்வொரு வாலிபனும் உண்மையான அன்பைத் தேடித் தேடி பல ஏமாற்றங்களையும், வலிகளையும் சந்தித்தே அவனுடைய வாழ்க்கையின் பாதி நாட்கள் முடிந்து விடுகிறது. மனிதனுடைய அன்பு பச்சோந்தி போல நிமிடத்திற்கு நிமிடம் மாறிக் கொண்டு தான் உள்ளது. "நீ இல்லாமல் வாழவே முடியாது" என்று சொல்லும் அதே வாய் தான் நாளை "நீ இருந்தால் என்னால் வாழவே முடியாது" என்று மாற்றி பேசும். இவ்வளவுதான் மனிதனுடைய அன்பு. ஆளை பார்த்தால் ஒரு அன்பு, அழகு இருந்தால் ஒரு அன்பு, பணம் இருந்தால் ஒரு அன்பு, இல்லாவிட்டால் ஒரு அன்பு இப்படி மனித அன்பு எப்பொழுது மாறும் என்று சொல்லவே முடியாது. இதனால் இன்று அநேகர் "உண்மையான அன்பு" யாரிடம் கிடைக்கும் என்று தேடி அலைந்து கொண்டு உள்ளனர்.



இன்றைய நவீன உலகில் வாலிபர்கள் அநேகருக்குள் இருக்கும் கேள்வியும் ஏக்கமும் என்னவென்றால்? என்னிடத்தில் அன்பு செலுத்த யாருமே இல்லை? பெற்றோர்கள் கூட தங்களிடம் அன்பு செலுத்தவில்லை என்று நினைத்து தவறான வழியில் சென்று விடுகின்றனர். பெற்றோர்கள் உங்கள் மீது அன்பு வைத்ததினால் தான் இரவு, பகல் பாராமல் உங்களுடைய எதிர்கால வாழ்க்கை நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக ஓடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை உங்களுக்கு நினைப்பூட்டுகிறேன். அதே வேளையில் பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளை கவனிக்க தவறுவதால் வாலிபர்கள் அநேகர் பள்ளி மற்றும் கல்லூரிகளில் படிக்கும் போதே உண்மையான அன்பு என்று நினைத்து மாய்மாலமான அன்பில் விழுந்து தங்களுடைய வாழ்க்கையை தொலைத்து விடுகின்றனர். படிக்கும் போது காதல் வசப்படுவதால் தங்களுடைய படிப்பில் கவனம் செலுத்த முடியாமல் வாழ்க்கையில் ஏமாற்றமும் அடைகின்றனர். இந்த ஏமாற்றம் கடைசியில் தற்கொலையில் போய் முடிகிறது. இந்தியாவில் காதல் தோல்வியால் இறப்பவர்களில் 15% பேர் தமிழகத்தை சேர்ந்தவர்கள். இந்த உலகில் இருக்கும் வாலிபர்கள் எப்படி வேண்டுமானாலும் வாழ்வார்கள். ஆனால் தேவனுடைய பிள்ளைகள் இப்படித்தான் வாழ வேண்டும் என்று நம்முடைய வேதம் சொல்கிறது.



''உலகத்திலும் உலகத்திலுள்ள வைகளிலும் அன்பு கூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை'' (1 யோவான் 2:15). தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டு அபிஷேகம் செய்யப்பட்ட



**காதல் என்பது உண்மையான அன்பு அல்ல, தேவனுடைய அன்பு மட்டுமே உண்மையானது.**

சிம்சோன் உலகத்தில் இருக்கும் வாலிபர்களை போல தன்னுடைய அழைப்பை மறந்து பெற்றோர்களின் வார்த்தையை மீறி, ‘‘அவன் போய் அந்தப் பெண்ணோடே பேசினான்; அவள் சிம்சோனின் கண்ணுக்குப் பிரியமாயிருந்தாள்’’ (நியா. 14:7). சிம்சோன் உலகத்தின் மாய்மாலமான அன்பில் விழுந்ததினால் தன்னுடைய அபிஷேகத்தையும், அழைப்பையும் இழந்து நிர்கதியற்ற நிலையில் காணப்பட்டான். சிம்சோனைப் போலவே இன்றைக்கும் அநேக கிறிஸ்தவ வாலிபர்கள் உலக இச்சையிலும், மாய்மாலமான உலக அன்பிலும் விழுந்து தேவன் தங்கள் மீது வைத்துள்ள திட்டத்தையும் அன்பையும் இழந்து காணப்படுகின்றனர்.



சிம்சோனைப் போல புற ஜாதி பெண் / ஆண் மீது தானே சிநேகம் வைக்கக் கூடாது. ஆனால் கிறிஸ்தவ வாலிபர்களை சிநேகிப்பதில் என்ன தவறு இருக்கிறது என்ற கேள்வி உங்களுக்குள் இருக்கலாம்? ‘‘பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக’’ (யாத். 20:17) என்று நம்முடைய வேதம் சொல்கிறது. நீங்கள் திருமணம் செய்யும் வரைக்கும் யாரும் யாருக்கும் சொந்தம் இல்லை. எனவே உங்களுக்கு சொந்தமில்லாத ஒருவரை சிநேகித்து அன்பு செலுத்துவது இச்சை என்று உங்களுக்கு நினைப்பூட்டுகிறேன். ‘‘காதல் என்பது உண்மையான அன்பு அல்ல, தேவனுடைய அன்பு மட்டுமே உண்மையானது’’. உண்மையான அன்பைத் தேடித் தேடி பல தோல்விகளையும், வலிகளையும் நீங்கள் சந்தித்து ஏமாந்து போய் இருக்கலாம். இந்த உலகத்தில் இருப்பவர்கள் உங்களிடத்தில் இருக்கும் அழகு, படிப்பு, திறமை, பணம் என்று ஏதாவது ஒன்றை எதிர்பார்த்து உங்களிடம் அவர்கள் அன்பை வெளிப்படுத்தி இருக்கலாம். உலகத்தில் இருப்போரின் அன்பு இப்படித்தான் இருக்கும். ஆனால் பிதாவாகிய தேவன் உங்கள் மீது உண்மையான அன்பு வைத்ததினால் தான், ‘‘தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்’’ (யோவான் 3:16) என்று வேதம் சொல்கிறது.




**எனக்கன்பான வாலிபர்களே! ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிடம் மட்டுமே உண்மையான அன்பை உங்களால் பெற முடியும். அவர் உங்கள்மீதும் என்மீதும் உண்மையான அன்பு வைத்ததால்தான் தன்னுடைய ஜீவனையே கல்வாரி சிலுவையில் கொடுத்து நம்மீது அன்பு வைத்தார். ஒருவேளை நீங்கள் சிம்சோனைப் போல உலகத்தின் மாய்மாலமான அன்பில் விழுந்து இருந்தால் சிலுவையின் அன்பை நோக்கிப் பாருங்கள். உண்மையான அன்பைத் தேடி ஏமாற்றத்தோடு இருக்கும் உங்கள் இருதயம் இயேசுவின் உண்மையான அன்பினால் நிரப்பப்படும்!**

# எழுப்புதலில் பவுல்!





செய்தி: சகோ. மோகன் சி. லாசரஸ்

**இயேசு** சொன்ன கடைசி கால அடையாளங்கள் இன்றைக்கு நம்மை சுற்றிலும் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. வெகு சீக்கிரத்தில் எழுப்புதல் தமிழ்நாட்டில் ஆரம்பித்து இந்தியா முழுவதும் பரவப் போகிறது. அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தில், எருசலேமில் எழுப்புதல் உண்டாகி, அங்கு சபை ஸ்தாபிக்கப்பட்டு, அந்த எழுப்புதல் உலக முழுவதும் பரவி சென்ற விதம் வேதப்புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அந்த எழுப்புதலை எடுத்து செல்வதற்கு, அந்த அக்கினியை பரவ செய்வதற்கு அப்போஸ்தலர்கள், சீஷர்கள் என்று பலரை பயன்படுத்தினார். அதில் விசேஷமாக வாலிபர்களை கர்த்தர் பயன்படுத்தினார். எழுப்புதல் தீவிரமாக பரவுவதற்கு இரத்தசாட்சியாக மரிப்பதற்கு அவசியம் என்பதால் ஸ்தேவான் இரத்த சாட்சியாக மரிக்க அர்ப்பணிக்கப்பட்டான் என்று (அப். 7:59,60) வாசிக்கிறோம்.



கர்த்தருக்காக வைராக்கியமாக நின்ற வாலிபன் ஸ்தேவான். அவனுடைய மரணத்தினால் தான் சவுல் என்கிற வாலிபன் இரட்சிக்கப்படுகிறான். எழுப்புதல் வேகமாக பரவுகிறது. கர்த்தர் சவுலைக் கொண்டு எப்படி எழுப்புதல் அக்கினியை பரவ பண்ணுகிறார்? என்பதை வேதம் நமக்கு சொல்கிறது. எருசலேமில் அக்கினி போடப்பட்டு, அது யூதேயா முழுவதும், சமாரியா, கலிலேயா, உலகம் முழுவதும் பரவ வேண்டுமென்பதே இயேசுவினுடைய விருப்பம் ஆனால் எல்லாரும் எருசலேமில் எரிந்து பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த நேரத்தில் தான் தேவன் சவுலை எழுப்புகிறார். தமஸ்குவுக்கு போகிற வழியில் பிரகாசமான வெளிச்சத்தில் இயேசு அவனைச் சந்தித்து (அப். 9), தெரிந்து கொள்கிறார்.

சவுலையும் பர்னபாவையும் அழைத்து அக்கினியை எல்லா இடத்திற்கும் கொண்டு போக வேண்டும் என்று ஆவியானவர் சொல்கிறார். வாலிபனாகிய சவுல் என்கிற பவுல் ஆவியினால் நிரப்பப்பட்டு அக்கினியை சுமந்து கொண்டு சீப்புரு தீவுக்கு வருகிறார். அப்போஸ்தலர் 13ம் அதிகாரத்திலிருந்து தொடர்ந்து வாசிக்கும்போது, சீப்புரு தீவில் எழுப்புதல், பிசீதியா நாட்டிலுள்ள அந்தியோகியா பட்டணத்தில் எழுப்புதல், இக்கோனியா பட்டணத்தில், லீஸ்திரா பட்டணத்தில், தெர்பை பட்டணத்தில் எழுப்புதல் உண்டானது. அவர்கள் போய் ஊழியம் செய்த இடத்தில் எல்லாம் எழுப்புதல் அக்கினி பற்றி பிடிக்கிறது. மறுபடியும் கர்த்தர் அழைப்பு கொடுத்து மக்கெதோனியா தேசத்தில் வந்து சுவிசேஷம் அறிவிக்கும்படி சொல்கிறார். பிலிப்பு பட்டணம், எபேசு பட்டணம், கலாத்தியா பட்டணம், கொரிந்து பட்டணம், அத்தேனே பட்டணம், ரோமாபுரி பட்டணம் வரைக்கும், தேவ அக்கினினால் நிரப்பப்பட பவுல் எடுத்து செல்கிறார்.

எபேசு பட்டணத்தில் எழுப்புதல் உண்டான போது, மந்திரவாதிகள் பயன்படுத்துகிற புத்தகத்தை ரோட்டில் போட்டு எரிக்கிறார்கள். ஒரு பெரிய மனந்திரும்புதல் அங்கே உண்டாகிறது. ரோமாபுரி வரைக்கும் மாத்திரமல்ல, ராஜாவினுடைய அரண்மனைக்குள்ளும் எழுப்புதல் அக்கினி பரவி, அரண்மனையில் காவல் காத்துக் கொண்டிருந்தவர்கள் வரை இரட்சிக்கப்படுகிறார்கள். பவுல் எங்கு போனாலும், யாரிடத்தில் பேசினாலும் எழுப்புதல் அக்கினி பரவுகிறது. அதற்காக தான் பவுலை தேவன் தெரிந்து கொண்டார். அன்றைக்கு பவுலைத் தெரிந்து கொண்ட தேவன், இன்றைக்கு நீங்கள் படிக்கிற இடத்தில், வசிக்கிற இடத்தில், வேலை செய்கிற இடத்தில், ஆராதிக்கிற இடத்தில் உங்கள் மூலமாக இந்த எழுப்புதல் அக்கினியைக் கொண்டு செல் வதற்காக தான் தேவன் உங்களை தெரிந்தெடுத்திருக்கிறார். ஸ்தேவான் கொல்லுவதற்கு சம்மதித்து, அதை காவல் காத்துக் கொண்டிருந்த வாலிபன் தான் இந்த சவுல். ஏன்



கர்த்தர் அவனை பயன்படுத்தினார்? அவனைக் கொண்டு இவ்வளவு பெரிய எழுப்புதலை கொண்டு வர காரணம் என்ன? கர்த்தருக்காக இவ்வளவு பெரிய காரியத்தை பவுலால் எப்படி சாதிக்க முடிந்தது? என்று நான்கு காரியங்களை உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

## தரிசனம் பெற்ற வாலிபன்!

'நான் அவனுக்கு தரிசனமாகி, அவன் செய்ய வேண்டிய காரியத்தை அவனுக்கு காண்பிப்பேன்' (அப். 26:16) என்று கர்த்தரே சொல்கிறார். அகிரிப்பா ராஜாவைப் பார்த்து, இயேசு கிறிஸ்து எனக்கு தரிசனமானார். நான் என்ன செய்ய வேண்டும் என்கிற தரிசனத்தை எனக்கு தந்திருக்கிறார். அந்தத் தரிசனத்திற்கு நான் கீழ்ப்படியாதவனாக இருக்கவில்லை (அப். 26:19) என்று தைரியமாக பவுல் சொல்கிறார். வாலிப மகனே(ளே), கர்த்தர் உன்னை இரட்சித்தபோது, உன்னைக் குறித்து தேவன் பெரிய தரிசன திட்டத்தை வைத்திருந்தார். நீ வேலை செய்து கொண்டிருந்தாலும், படித்துக் கொண்டிருந்தாலும், எழுப்புதல் திட்டத்தில் உன்னைக் குறித்து தேவனுக்கு பெரிய திட்டம் இருக்கிறது என்பதை நீ அறிந்து கொள்ள வேண்டும். அந்தத் தரிசனத்தை பவுல் பெற்று, அந்தத் தரிசனத்திற்கு தன்னை அர்ப்பணிக்கிறார். இதுவரைக்கும் நான் அதைச் செய்வேன், நான் இவர்களை அழிப்பேன், நான் சபையை பாழாக்குவேன் என்று ஓடிக் கொண்டிருந்தவர், இயேசுவை தரிசித்தவுடன், 'நான் என்ன செய்ய நீர் சித்தமாயிருக்கிறீர்!' என்று கேட்கிறார். அதுதான் எழுப்புதல் தரிசனத்திற்கு அர்ப்பணிக்கிற காரியம். இன்றைக்கு நீங்களும் கர்த்தாவே நான் என்ன செய்ய வேண்டும்? என்று நீங்கள் ஒப்புக்கொடுக்கும் போது, உங்களை எழுப்புதலில் கர்த்தர் பயன்படுத்துவார். உங்களுக்கும் எழுப்புதல் தரிசனத்தைக் கொடுப்பார்.

## ஜெபிக்கிற வாலிபன்!

கர்த்தர் சவுலை தமஸ்குவிற்கு போகிற வழியில் சந்திக்கிறார் (அப்.9). அனனியா என்கிற தீர்க்கதரிசியிடம் கர்த்தர் பேசி, சவுலிடம் பேசும்படி அனுப்புகிறார். நீ போய் சவுலை சந்தித்து, அவன் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட வேண்டும் என்று சொல்லி கர்த்தர் அனுப்பும் போது ஒரு அடையாளத்தைச் சொல்கிறார், இப்பொழுது அவன் தண்ணீர் கூட குடிக்காமல் 3 நாட்களாக



உபவாசம்பண்ணி ஜெபம் செய்து கொண்டிருகிறான் (அப்.9:1-11). ஜெபிக்கிறவர்களைத் தான் எழுப்புதலில் கர்த்தர் பயன்படுத்துவார். இயேசு பேதுருவிடம் ஒரு மணிநேரமாவது என்னுடன் ஜெபிக்ககூடாதா? என்று ஏக்கத்தோடு கேட்கிறார். அடுத்த வார்த்தை எழும்புங்கள், உங்களுக்கு கொடுத்த நேரம் முடிந்து விட்டது, என்னை பிடிக்க வந்துவிட்டார்கள், இதோ என்னை காட்டிக்கொடுக்கிறவன் வந்து விட்டான் என்று சொல்கிறார். பேதுரு அதற்கு பிறகு பத்து நாட்கள் இரவும் பகலும் ஜெபத்தில் தரித்திருந்தான் என்று வேதம் சொல்கிறது. ஆதிச்திருச்சபையில் இரவும் பகலும் ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். ஜெபத்திலே உறுதியாய் தரித்திருப்போம் என்று பேதுரு சொல்கிறார்.



ஜான் நாக்ஸ்

இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள் என்று இயேசு சொல்கிறார். ஜெபம் பண்ணின ஜான் நாக்ஸ் மூலமாக ஸ்காட்லாந்து தேசத்தில் கர்த்தர் எழுப்புதலைக் கொண்டு வந்தார். இரவு 12 மணியில் இருந்து அதிகாலை 4 மணி வரை ஜெபம் பண்ணின ஈவான் இராபர்ட்ஸ் மூலமாக தான் வேல்ஸ் தேசம் முழுவதும் எழுப்புதலைக் கொண்டு வந்தார். ஜெபிக்காமல் எழுப்புதலை காண முடியாது. தேவனுக்காக சாதித்த எல்லாரும் ஜெபிக்கிறவர்கள் என்பதை நாம் வேதத்தில் பார்க்கிறோம், நெகேமியா உபவாசம் பண்ணி, தேவ சமூகத்தில் விழுந்து கிடந்து ஜெபித்தார். அவர் மூலமாக தான் எழுப்புதல் வந்தது. தானியேல் உபவாசம் பண்ணி ஜெபித்தார். அவர் மூலமாக தான் தேவன் ஒரு பெரிய ஆசீர்வாதமான மாற்றத்தை உண்டாக்கினார். ஜெபிக்கிறவர்கள் மூலமாக தான் எழுப்புதல் பரவ செய்ய முடியும்.



ஈவான் இராபர்ட்ஸ்

## தீவிரமாய் எழும்பின வாலிபன்!

அவன் தாமதம் பண்ணாமல், தீவிரமாய் எழும்பி சுவிசேஷத்தை பிரசங்கித்தான் (அப்.9:20). கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று ஆலயங்களிலே பிரசங்கித்தான் என்று வசனம் சொல்கிறது. ஜெபித்துக் கொண்டிருந்தால் மாத்திரம் போதாது, சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும். பவுல் ஜெபம் பண்ணினதோடு, சுவிசேஷத்தை அறிவித்தார். சுவிசேஷத்தை நான் அறிவித்து வந்தும் மேன்மை பாராட்ட எனக்கு இடமில்லை (1 கொரி. 9:16). நான் எல்லாரிலும் அதிகமாய் பிரயாசப்பட்டேன் என்று 2 கொரிந்தியர் 11:23ம் வசனத்தில் சொல்கிறார். அதிகமாய் நான் ஊழியம் செய்தேன், அதிகமாய் நான் பிரயாசப்பட்டேன், ஆனாலும் மேன்மைப்பாராட்ட எனக்கு இடமில்லை. இது என்மீது விழுந்த கடமை. சுவிசேஷத்தை நான் பிரசங்கியாமல் இருந்தால் எனக்கு ஐயோ! என்று சொல்கிறார். சுவிசேஷத்தை அறிவிக்காத விசுவாசியே உனக்கு ஐயோ! இயேசு கிறிஸ்துவை, அறிவிக்காத வாலிப மகளே(ளே) உனக்கு ஐயோ என்பதை உணர்ந்து கொள். இந்த இயேசுவை அறிந்தும், அவருடைய இரட்சிப்பை அறிந்தும், அவர் கொடுக்கிற பாவ மன்னிப்பை அறிந்தும் நீ அவரைக் குறித்து அறிவிக்காவிட்டால், அது சாபம் என்று பவுல் சொல்கிறார். ஆகவே பவுல் சுவிசேஷத்தை அறிவிக்கிறதில்



எவ்வளவு தீவிரமாக இருந்தார் என்பதை (ரோமர் 1:14-16) வசனங்களில் பார்க்க முடிகிறது. இயேசுவை அறிந்த நீங்கள் அறியாதவர்களுக்கு கடனாளி என்று சொல்கிறார். நீங்கள் படிக்கிற கல்லூரியில், படிக்கிற பள்ளியில், நீங்கள் வேலை செய்கிற ஐ.டி. கம்பெனியில், நீங்கள் பணிபுரியும் அலுவலகத்தில் ஆயிரக்கணக்கானோர் இந்த இயேசுவை அறியாமல் இருக்கிறார்கள். இவர் தான் இரட்சகர் என்பதை அறியாமல் இருக்கிறார்கள். உனக்கு தெரிந்த இரட்சகரை நீங்கள் அறிவிக்காமல் இருந்தால், அதுவே ஒரு பாவம். எழுப்புதல் அக்கினி உங்கள் மூலமாக பரவ வேண்டுமானால் சுவிசேஷத்தை சொல்ல வேண்டும். தேவன் அதை எதிர் பார்க்கிறார். கர்த்தாவே நான் சுவிசேஷத்தை சொல்லுவேன், இயேசுவை மற்றவர்களுக்கு நான் அறிமுகப்படுத்துவேன் என்று ஒப்புக்கொடுங்கள்.

## வைராக்கியமுள்ள வாலிபன்!

நான் போகிற இடமெல்லாம் கர்த்தர் ஒரு காரியத்தைக் குறித்து என்னோடு பேசுகிறார். எனக்கு கட்டுகளும், உபத்திரவங்களும், பாடுகளும் வைக்கப்பட்டிருக்கிறது என்பதை ஆவியானவர் எனக்கு காண்பித்துக் கொண்டிருக்கிறார். என்றாலும், ஒன்றைக் குறித்தும் நான் கவலைப்படேன். ஒன்றைக் குறித்தும் நான் பயப்படேன். இயேசுவுக்காக நிந்திக்கப்படுவதற்கு மாத்திரம் அல்ல, அவருக்காக என் ஜீவனை கொடுக்கவும் நான் ஆயத்தமாய் இருக்கிறேன் என்று பவுல் சொல்கிறார் (அப். 20:22-24). அவருக்காக அவமானப்படுவது மாத்திரம் அல்ல, அவருக்காக நிந்திக்கப்படுவது மாத்திரம் அல்ல, என் ஜீவனைக் கொடுக்கவும் ஆயத்தம். அவர் எதற்காக என்னை பிடித்தாரோ, அந்த ஊழியத்தை நிறைவேற்றி முடிக்க நான் விரும்புகிறேன். பாடுகளை கண்டு அவர் பின்வாங்கவில்லை. நிந்தைகளைக் கண்டு அவர் பின்வாங்க வில்லை. பயமுறுத்தலைக் கண்டு அவர் பின்வாங்க வில்லை. மரிக்கவும் ஆயத்தம். அதனால்தான் தேவன் அவர் மூலமாக எழுப்புதலை பரவ பண்ணினார். இயேசுவைப் பற்றி சொன்னால் பள்ளியில் சான்றிதழ் கிடைக்காது, பட்டம் கிடைக்காது, கல்லூரியை விட்டு அனுப்பி விடுவேன் என்று சொல்கிறார்கள். அதனால் இயேசுவை அறிவிக்கக் கூடாது என்று அநேகர் அமைதியாக இருக்கிறீர்கள். எனக்கு சான்றிதழ் தந்தாலும் தராவிட்டாலும், பட்டம் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும், என்னை நேசிக்கிற இயேசுவை சொல்லுவேன் என்று சொல்லுகிற வாலிபர்கள் இயேசுவுக்கு வேண்டும். என் ஜீவனே போக வேண்டியதாயிருந்தாலும் அந்த இயேசுவை நான் அறிவிப்பேன், இயேசுவை சொல்லுவேன், அவருக்காக மரிப்பதற்கும் நான் ஆயத்தம் என்று பவுல் வைராக்கியமாய் சொல்கிறார். அப்படி வைராக்கியமுள்ள வாலிபர்கள், வாலிப பெண் பிள்ளைகள் வேண்டுமென்று இயேசு கிறிஸ்து எதிர்பார்க்கிறார்.

சீன தேசத்தில் கல்லூரியில் படிக்கும் இரண்டு வாலிப பெண் பிள்ளைகள் வெள்ளிக்கிழமை வரைக்கும் கல்லூரிக்கு செல்வார்கள். வெள்ளிக்கிழமை மாலையில் படிப்பு முடிந்தவுடன், சனி, ஞாயிறு இரண்டு விடுமுறை நாட்களில் நாங்கள் ஊழியம் செய்ய போகிறோம், இயேசுவை அறிவிக்க போகிறோம் என்று ஆளுக்கொரு தோள் பை எடுத்துக் கொண்டு, அவர்களுக்கு கிடைக்கிற சின்ன சின்ன கைப்பிரதிகளை சேகரித்துக் கொண்டு தங்கள் பெற்றோரிடம் சொல்லி விட்டு புறப்படுவார்கள். அவர்கள் பெற்றோரும் சந்தோஷமாக அனுப்பி வைக்கிறார்கள். இரண்டு நாட்களும் ஒவ்வொரு கிராமங்களாக, ஊர்களாக சென்று இயேசுவை அறிவிப்பார்கள். வாரந்தோறும் இந்த இரண்டு பிள்ளைகளும் பல கிராமங்களுக்கு சொன்று சுவிசேஷத்தை அறிவிக்கிறார்கள். சீனா கம்யூனிஸ்ட் நாடு, பிள்ளைகளை பிடித்தால் உடனே ஜெயிலில் போட்டு விடுவார்கள். அவர்கள் படிப்பு பாதிக்கப்படும், எதிர்காலம் பாதிக்கப்படும், ஆனால் அவர்கள் எதைக் குறித்தும் கவலைப்படாமல் இயேசுவை அறிவிக்க வேண்டும், சுவிசேஷத்தை சொல்ல வேண்டும், இயேசுவை மற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டும் என்று இரண்டு கல்லூரியில் படிக்கிற வாலிப பிள்ளைகள் புறப்பட்டு செல்கிறார்கள், யோசித்துப் பாருங்கள்! நீங்கள் எப்படி?



**நீங்கள் கேட்டதை எல்லாம் இயேசு கொடுத்தார், உங்களுக்காக உயிரையே கொடுத்த கர்த்தருக்கு நீங்கள் என்ன செய்கிறீர்கள்? பவுலைப் போல வாலிபர்கள் இயேசுவுக்கு வேண்டும். எனக்காக உயிரைக் கொடுத்த இயேசுவுக்காக நான் எதையும் செய்ய ஆயத்தம்! எனக்காக சிலுவையில் இரத்தம் சிந்தின இயேசுவுக்காக மரிக்கவும் ஆயத்தம்! என்று சொல்லக்கூடிய வாலிபர்கள் இயேசுவுக்கு வேண்டும். அவர்களைத் தான் எழுப்புதலில் கர்த்தர் பயன்படுத்துவார்! எத்தனை பேர் ஆயத்தமாக இருக்கிறீர்கள்! ♥**

புதிர்: ஐனிக்கா அதிசயம்

# வேதாகம

## புதையல் வேட்டை

**கீழேக் கொடுக்கப்பட்டுள்ள படங்களில் வேதத்தில் உள்ள ஒருசில வசனங்கள் மறைந்திருக்கிறது. வேதவசனங்களை இணைத்து அதன் இருப்பிடத்தை கண்டுபி டித்து எங்களுக்கு எழுதி அனுப்பவும்.**

















பதில் வந்துசேர வேண்டிய கடைசி நாள்

**15.02.2022**

### கடந்த மாத விடைகள்

**1) பாலாக். 2) ஆதாம். 3) ராகேல். 4) அபிகாயில். 5) ஒனேசெமு. 6) பத்சேபாள். 7)தீமோத்தேயு. 8) சிமியோன் . 9) ஸ்தேவான். 10) பிலேமோன்**




வெற்றிபெறும் ஒரு நபருக்கு Ear phone பரிசு வழங்கப்படும்

JESUS REDEEMS YOUTH MINISTRIES,
Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535.
eMail: youth@jesusredeems.org

# ஒரு கோப்பை காபி 520 கோடி...




சாதனை: சுமா

புதிய துவக்கம் புதிய உத்வேகத்துடன் இந்த ஆண்டில் காலடி எடுத்து வைத்திருக்கும் துணிவு நிறைந்த இளம் சாதனையாளர்களுக்கு என்னுடைய வெற்றியின் வாழ்த்துக்கள். அநேகர் இந்த வருடத்தில் இந்த விஷயத்தில் சாதிக்க வேண்டும், அந்த விஷயத்தில் சாதிக்க வேண்டும் என்று மனக்கோட்டை கட்டியிருப்பீர்கள். ஆனால் நாம் வாய்ப் பேச்சு உள்ளவர்களாக மட்டும் இல்லாமல், எந்த சூழ்நிலை வந்தாலும் அவற்றை மன உறுதியுடன் எதிர்கொண்டு சாதிப்பதில் மாத்திரம் கவனம் செலுத்த இவரின் வாழ்க்கை உங்களுக்கு உதாரணமாக இருக்கும் என நான் நம்புகின்றேன்.



Howard Schultz, 1953ஆம் ஆண்டு நியூயார்க்கில் உள்ள புரூக்ளினில் பிறந்தார். அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட சிறிய வீட்டில் அவரின் முழு குடும்பமும் வசித்தது. எல்லா சாதனையாளர்களைப் போலவே இவரையும் வறுமை ஒரு கைப்பார்த்தது. வறுமை மாத்திரம் அல்ல, உடல் நிலைமையும் அவரை மகிழ்ச்சியாக இருக்க விடவில்லை. ஹோவர்ட் 7 வயதாக இருக்கும் போது பனி சறுக்கில் முதுகிலும், கணுக்காலிலும் பலமாக காயம் ஏற்பட்டு படுத்த படுக் கையானார். மருத்துவமனைக்கு பணம் கொடுக்கக் கூடிய சூழ்நிலையில் இவர் குடும்பம் இல்லை. எந்தவொரு மருத்துவ காப்பீடும் எடுக்கவில்லை.

வறுமை, மகிழ்ச்சியின்மை, குடும்ப சூழ்நிலை மற்றும் மோசமான உடல்நிலை இவைகள் அனைத்தும் ஹோவர்ட்டை நெருக்கத் தொடங்கியது. இவரின் கொடிய சூழ்நிலையை சமாளிக்க பள்ளிக்குச் சென்று கால்பந்து விளையாட்டை ஆர்வத்துடன் விளையாட தொடங்கினார். இரவில் தூங்குவதற்கு மட்டுமே வீட்டிற்கு செல்ல ஆரம்பித்தார். பள்ளிப் படிப்பை முடித்து விட்டு B.A. Communication படிப்பை Moxian பல்கலைக்கழகத்தில் படிக்க முடிவு செய்தார். இவருக்கு கால்பந்து தெரியும் என்பதால் ஸ்காலர்ஷிப் கிடைக்கும் என்ற எண்ணத்தில் இந்த யூனிவர்சிட்டியில் சேர்ந்தார். காலர்ஷிப் வைத்து படிக்க நினைத்த இவரின் ஆசை தோல்வியைக் கண்டது. படிப்பைத் தொடருவதற்காக கல்விக் கடன், பகுதி நேர வேலை செய்து படிக்கத் தொடங்கினார். சில நேரங்களில் தன்னுடைய இரத்தத்தை விற்று, அந்தப் பணத்தில் படிப்பைத் தொடந்தார். ஒரு வழியாகப் படிப்பை முடித்து பட்டம் பெற்றார். இவர்தான் இவர்களது குடும்பத்தில் முதல் பட்டதாரி, படித்து முடித்த உடனே வேலையும் கிடைக்கவில்லை. ஆனால் விடாமுயற்சியுடன் வேலை தேடி, ஒரு சிறிய



கம்பெனியில் விற்பனையாளராக வேலைக்கு சேர்ந்தார். மிகவும் கஷ்டப்பட்டு கிடைத்த வேலை என்பதால் தனது பேச்சு திறமையை வளர்த்துக் கொண்டு கவனத்துடன் வேலை



செய்யத் தொடங்கினார். பிறகு சமையலறை பொருட்களுக்கான உதிரி பாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் மேலாளர் பொறுப்பை ஏற்றார். இந்த நிலையில் தான் ஸ்டார்பக்ஸ் நிறுவனம் Coffee cone filter வேண்டும் என்று ஹோவர்ட் வேலை செய்யும் நிறுவனத் திற்கு ஆர்டர் வந்தது. ஹோவர்ட் தாமே நேரில் சென்று ஸ்டார்பக்ஸ் நிறுவனத்தை பார்வையிட முடிவு செய்து, ஸ்டார்பக்ஸ் நிறுவனத்திற்கு சென்றார். அந்த நேரத்தில் ஸ்டார்பக்ஸ் நிறுவனம் காப்பி கொட்டைகளை விற்பனை செய்யும் நிறுவனமாகவும், யாராவது காபி கேட்டால் மட்டுமே காபி தரும் நிறுவனமாக இருந்தது.

பேச்சு திறமையால் Coffee cone filter-யை ஸ்டார்பக்ஸ் நிறுவனம் வாங்கியது. ஹோவர்ட்டின் பேச்சு சாமார்த்தியத்தை கண்ட ஸ்டார்பக்ஸ் உரிமையாளர் ஹோவர்ட்டை Marketing Director-ஆக நியமிக்க முடிவு செய்து அவரிடம் கேட்க, உடனடியாக அவரும் அந்தப் பொறுப்பை ஏற்றார். ஹோவர்ட் வேலைக்கு சேர்ந்த உடனே அநேக ஆர்டர்ஸ் வர ஆரம்பித்தது. இந்நிறுவனத்திற்கு வரும் ஆர்டர்கள் அனைத்தையும் ஹோவர்ட் கையாண்டு திறமையாக செய்து முடிப்பார். இந்த

நிலையில் இத்தாலியில் இருந்து ஸ்டார்பக்ஸ் நிறுவனத்திற்கு ஒரு ஆர்டர் வரவே, இந்த ஆர்டரை பேசி முடிக்க ஸ்டார்பக்ஸ் நிறுவனம் ஹோவர்ட்டை இத்தாலிக்கு அனுப்பியது. ஹோவர்ட் இத்தாலியில் உள்ள காபி ஷாப்பை பார்த்து திகைத்துப் போனார். ஏனென்றால் இத்தாலி மக்கள் அதிகம் விரும்பும் இடமாக காபி ஷாப் இருந்தது. ஒரு தெருவிற்கு இரண்டு காபி ஷாப் என இருந்தது. இதையெல்லாம் பார்த்த ஹோவர்ட் அமெரிக்கா சென்று ஸ்டார்பக்ஸ் உரிமையாளரிடம் நாம் ஸ்டார்பக்ஸ் காபி ஷாப் என்று ஒரு காபி ஷாப்பை தொடங்கலாம் என்று ஆர்வத்துடன் கூறினார். ஆனால் ஸ்டார்பக்ஸ் உரிமையாளர் இதெல்லாம் இத்தாலிக்கு வேண்டுமென்றால் பிரபலமாக இருக்கலாம், ஆனால் அமெரிக்காவிற்கெல்லாம் காபி ஷாப் ஒத்துவராது என்று அவரின் முகத்திற்கு நேராகவே சொன்னார்கள்.




மீண்டும் இரண்டு முறை ஸ்டார்பக்ஸ் உரிமையாளர்களிடம் சொல்லிப் பார்த்தார். ஆனால் இவர்கள் செவி சாய்க்கவில்லை. எனவே ஹோவர்ட் எது வந்தாலும் பார்த்துக் கொள்ளலாம் என்று ஸ்டார்பக்ஸ் நிறுவனத்திடம் செய்து வந்த Marketing Director வேலையை விட்டு, சொந்தமாக காபி ஷாப் திறக்க முடிவு செய்தார். அமெரிக்காவில் யாரும் யோசிக்காத திட்டம் ஹோவர்ட்டிடம் இருந்தது. ஆனால் முதலீடு செய்வது எப்படி என்று யோசித்து, அமெரிக்காவிலுள்ள தொழிலதிபர்களைச் சந்தித்து 10 பேரிடம் தன்னுடைய யோசனையைச் சொன்ன போது, யாரும் முன் வரவில்லை. பிறகு 20 பேரிடம் சென்று சொன்னார். அப்பொழுதும் யாரும் வரவில்லை. சோர்ந்து போகாமல் 40 பேரிடம் சொன்னார். யாரும் முன்வரவில்லை. பிறகு 80 பேரிடம் சொன்னார். எந்த மாற்றமும் இல்லை. துணிவுடன் 160 பேரிடம் சொன்ன போது 10 பேர் மட்டும் முதலீடு செய்ய முன்வந்தனர். ஆனால் இந்த 10 முதலீட்டாளர்களின் முதலீடு ஹோவர்ட்டுக்கு உதவாது. எனவே 250 பேரிடம் இவரது யோசனையைச் சொல்லி 20 பேரை முதலீட்டாளராகக் கொண்டு வந்தார்.

அதையடுத்து ஸ்டார்பக்ஸ் நிறுவனத்திடம் சென்று என்னிடம் 20 முதலீட்டாளர்கள் உள்ளனர். நீங்கள் முதலீடு செய்தால் நாம் வெற்றி காணலாம் என்று கூறினார். இவரின் பேச்சுத் திறமையை அறிந்த ஸ்டார்பக்ஸ் உரிமையாளர் இந்த முதலீட்டை செய்தனர். முதலீட்டாளர்கள் அனைவரையும் இணைத்து புதிய காபி ஷாப்பை தொடங்கினார். குடிக்கின்ற காபி கப்பில் இருந்து காபி கொட்டைகள் மற்றும் கடை அலங்காரம் என்று ஒவ்வொரு செயலையும் மிக துல்லியமாக அழகாக நேர்த்தியாக செய்து IL Geonale என்ற பெயரில் காபி ஷாப்பைத் தொடங்கினார். இதைத் தொடர்ந்து அடுத்த வருடத்திலேயே மூன்று கடைகளை புதிதாக



தொடங்கினார். இந்த நிலையில் ஸ்டார்பக்ஸ் நிறுவனத்தை 38 டாலர் பில்லியன் அளவிற்கு விற்க முடிவு செய்தனர்.

ஸ்டார்பக்ஸ் நிறுவனத்தை தொகை அதிகமாக இருந்தாலும் துணிச்சலுடன் வாங்கினார். IL Geonale என்ற தன்னுடைய கடைகளின் பெயர்களை மாற்றி ஸ்டார்பக்ஸ் என்ற பெயரை வைத்தார். அடுத்தடுத்து 11 கடைகளைத் தொடங்கினார். அனைத்து கடைகளிலும் அதிக இலாபம் கிடைத்தது. எனது சின்ன வயதில் மருத்துவ காப்பீடு எடுக்காததால் எவ்வளவு



கஷ்டப்பட்டோம் என்பதை நினைத்து, தன்னுடைய நிறுவனத்தில் பணிபுரியும் அனைவருக்கும் நிறுவனத்தின் சொந்த செலவில் மருத்துவ காப்பீடு எடுத்துக் கொடுத்தார். முதன்முதலில் தன்னுடைய சொந்த செலவில் Health Policy எடுத்த நிறுவனமாக ஸடார்பக்ஸ் மாறியது. இதுவே இந்த நிறுவனத்திற்கு விளம்பரமாக அமெரிக்கா முழுவதும் பரவியது. அமெரிக்காவில் மட்டுமல்லாமல் உலக நாடுகளிலும் காலடி



எடுத்து வைத்தது. இன்றைக்கு 77 நாடுகளில் 32,392 கடைகள் ஸ்டார்பக்ஸ் நிறுவனத்திற்கு உள்ளது. இவரின் சொத்து மதிப்பு 520 கோடி அமெரிக்கன் டாலர்ஸ் என்பது குறிப்பிடத்தக்கது.




**அன்பான வாலிபர்களே நம்முடைய வாழ்க்கையிலும் வெற்றி அடைய அநேக திட்டங்களை தீட்டுவது உண்டு. ஆனால் அதை மற்றவர்கள் நிராகரிக்கும் போது நாமும் அந்தத் திட்டங்களை விட்டு விடுகிறோம். ஹோவர்ட் அப்படி செய்து இருந்தால், உலக புகழ் பெற்ற ஸ்டார்பக்ஸ் உருவாகியிருக்க முடியாது. ஒரு காரியத்தை ஆசைப்படுவது மட்டும் அல்ல, அவற்றை அடைய ஆவலாய் தொடர வேண்டும். அப்படி தொடர்ந்தால் நம்முடைய ஆசையும் அதிசயமாய் மாறும்!!! ❤**




## "தன் ஆளுகையையே அளிக்கும் அன்பு"

### தாவீது - யோனத்தான்

தாவீதும் யோனத்தானும் நெருங்கிய நண்பர்கள். யோனத்தான் போர் செய்வதற்காக வைத்திருந்த எல்லா ஆயுதங்களையும் தன்னுடைய வில்லையும் தாவீதுக்கு கொடுத்தார் (1 சாமு. 18:1-5). தாவீது எல்லா இடத்திலும் புத்தியாக காரியத்தை நடப்பித்ததினால், சவுல் தாவீதை அதிகாரியாக்கினார். பெலிஸ்தியர்களோடு நடந்த போரில் தாவீதுக்கு வெற்றி மேல் வெற்றி குவிந்தது. அதனால் சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம் என்று இஸ்ரவேலை சேர்ந்த பெண்கள் பாடினார்கள். சவுலுக்கு இது பிடிக்காமல், அந்த நாளிலிருந்து சவுல், தாவீதை எப்போதும் எரிச்சலின் கண்ணோடுதான் பார்க்க ஆரம்பித்தார் (1 சாமு. 18:7,9). தாவீதுக்குப் பல வெற்றிகள் கிடைத்ததால் சவுல் அவர் மீது மிகவும் பொறாமைப்பட்டார். அதனால் தன்னிடம் இருந்த ஈட்டியை தாவீதை நோக்கி எறிந்தார் (1 சாமு. 19:4-6, 9,10). தாவீது தப்பித்து சவுலுடைய அரண்மனையை விட்டு ஓடிப்போனார். நண்பன் மேல் யோனத்தானுக்கு இருந்த அன்பு மாறவே இல்லை. யோனத்தான், தாவீதிடம், பயப்படாதே, என் அப்பாவால் உன்னை எதுவும் செய்ய முடியாது என்ற நம்பிக்கையைக் கொடுத்தார். நீதான் இஸ்ரவேலின் ராஜாவாக இருப்பாய் என்று தாவீதிடம் சொன்னார் (1 சாமு. 23:17). யோனத்தான் தன் தகப்பன் சவுலிடமிருந்து தாவீதைக் காப்பாற்றி பாதுகாத்து வைத்தார்.

**அன்பான வாலிபர்களே! தாவீதின் மேல் உண்மையான அன்பு வைத்திருந்ததால் தான், தனக்கு கிடைக்க வேண்டிய தன் அதிகாரத்தையே கொடுத்தார். தன் நண்பனை தன் தகப்பனிடமிருந்து காப்பாற்ற எவ்வளவோ பிரயாசப்படுகிறார். நீங்களும் யோனத்தான் தாவீது போல உண்மையான அன்பை பிரதி பலிக்கிறவர்களாக இருக்கிறீர்களா?**

## "ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை அளிக்கும் அன்பு"

### எலியா - எலிசா

எலியா தன்னுடைய பொறுப்பை இன்னொருவரிடம் ஒப்படைக்கும் நேரம் வந்தது. எலியா எலிசாவோடு கில்காலிருந்து புறப் பட்டு செல்கிறார்கள். தான் மட்டும் பெத்தேலுக்கு போய் வருகிறேன் என்று சொன்னவுடன் உயிருள்ள தேவனாகிய கர்த்தர் ஆணையாகவும், உமது ஜீவன் மேல் ஆணையாகவும் நான் உங்களை விட்டு போக மாட்டேன் என்று எலியாவும் எலிசாவும் பெத்தேலுக்கு போனார்கள். பின்பு எலியா நான் எரிகோ மட்டும் போய் வருகிறேன் என்றதும் முன்பு சொன்ன அதே வார்த்தைகளையே சொல்லி இருவரும் எரிகோவுக்கு வந்தார்கள். மூன்றாவது முறையாக யோர்தானுக்கு கர்த்தர் என்னை அனுப்புகிறார், நீ இங்கேயே இரு என்றதும் நாம் இருவரும் போகலாம் என்று சொல்லி இரண்டு பேரும் யோர்தானுக்குப் போனார்கள் (2 இராஜா. 2:1-6). எலிசா, எலியாவிடம் மாறாத அன்பை காட்டினார். எலிசா எலியாவின் மீது காட்டிய உண்மையான அன்பினால் தான் எலியா செய்த கடைசி அற்புதத்தைப் பார்க்கும் பாக்கியம் எலிசாவுக்கு கிடைத்தது. யோர்தானை கடந்து பிறகு எலிசாவிடம் நான் உன்னை விட்டுப் போகப் போகிறேன், உனக்கு என்ன வேண்டுமோ கேள் என்று எலியா கேட்டார். அதற்கு எலிசா: உம்மிடத்திலுள்ள ஆவியின் வரத்தில் இரண்டு மடங்கு எனக்கு வேண்டும் என்றார் (2 இராஜா. 2:9). எலியாவுக்கும் எலிசாவுக்கும் இருந்த மாறாத அன்பு எல்லாவிதமான கஷ்டங்களை சகித்துக் கொள்ள உதவியது.



**அன்பான வாலிபர்களே! எலியா, எலிசாவைப் போல சந்தோஷமான நேரத்தில் மட்டுமல்லாமல் பாடுகள் மத்தியிலும் கூட இருந்து ஆசீர்வாதங்களை அளிக்கும் அன்பு உடையவர்களாக இருக்கிறீர்களா?**



## “கற்பை கலங்க வைக்கும் அன்பு”

### அம்னோன் - யோனதாப்

தாவீதின் குமாரன் அப்சலோமுக்கு தாமார் என்ற சகோதரி இருந்தாள். தாவீதின் குமாரன் அம்னோன் அவள் மேல் உள்ள மோகத்தினால் வியாதிப்பட்டான். அம்னோனுக்கு யோனதாப் என்ற மிகவும் தந்திரமான கெட்ட நண்பாக இருந்தான். அம்னோன் வியாதிப்பட்டவன் போல் இருக்கிறாயே என்ன காரணம் என்று கேட்டதற்கு, அம்னோன், தாமாரின் மேல் நான் ஆசை வைத்திருக்கிறேன் என்றான். உடனே யோனதாப் நீ வியாதிக்காரனைப் போல உன் படுக்கையின் மேல் படுத்துக் கொள், உன் தகப்பன் உன்னைப் பார்க்க வரும் போது, தாமார் தன் கையினாலேயே சமைத்து எனக்கு போஜனம் தரும்படி, அவளை அனுப்பும்படி சொல் என்ற கெட்ட ஆலோசனையைக் கொடுத்தான். ராஜா வந்த போது தாமாரை அனுப்பும்படி கேட்டுக் கொண்டான். உடனே தாமாருக்கு ஆளனுப்பி வரவழைத்து அவனுக்கு சாப்பாடு செய்து கொடுத்தாள். எல்லோரையும் அனுப்பி விட்டு, தாமாரை அவள் செய்த உணவையும் எடுத்துக் கொண்டு உள்ளறைக்கு கொண்டு வரச் சொல்லி, அவளைப் பலவந்தபடுத்தி தகாத உறவு கொண்டான். அதன்பிறகு அவளை அம்னோன் மிகவும் அதிகமாய் வெறுத்தான். அப்சலோம் தன் சகோதரன் அம்னோனை கொலை செய்தான் (2 சாமு. 13).

**அன்பான வாலிபர்களே! அம்னோனின் சகோதரி தாமார் என்பதை அறிந்திருந்தும் யோனதாப் கொடுத்த தவறான ஆலோசனையைக் கேட்டு, தன் வாழ்க்கையை இழந்தான். உண்மையான அன்பிருந்தால் தவறான பாதையில் செல்லும் நண்பனை நல்வழிபடுத்துவார்கள். அதுவே உண்மையான அன்பு. நீங்கள் எப்படி?**

## “கலகத்தை ஏற்படுத்திய அன்பு”

### ரெகொபெயாமும் - நண்பர்களும்

ரெகொபெயாமை ராஜாவாக்க இஸ்ரவேலர்கள் அனைவரும் சீகேமுக்கு வந்திருந்த போது, சாலொமோன் ராஜா ஜனங்கள் மீது சுமத்திய அதிக வரிச்சுமையைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். மூன்று நாட்களுக்கு பின்பு பதில் சொல்வதாகக் கூறி அனுப்பினார். தன் தகப்பனுக்கு சேவை செய்த முதியவர்களிடம் ஆலோசனைக் கேட்ட போது, நீ இந்த மக்களுக்கு நன்மை செய்து, அவர்களைப் பிரியப்படுத்தி, நல்ல வார்த்தைகளைப் பேசினால், அவர்கள் என்றென்றும் உமக்கு வேலைக்காரர்களாக இருப்பார்கள் என்று ஆலோசனைக் கொடுத்தார்கள். ஆனால் அந்த ஆலோசனையை கைவிட்டு தன் நண்பர்களின் ஆலோசனைப்படி, என் சுண்டு விரல் என் அப்பாவின் இடுப்பைப் விட கடினமாக இருக்கிறது, இப்பொழுது என் தகப்பன் ஒரு பாரமான நுகத்தை உன்மேல் சுமத்தினார், நான் உன் நுகத்தை மேலும் கூட்டுவேன், என் தந்தை உங்களை சாட்டையால் சிட்சித்தார், ஆனால் நான் தேள்களால் உங்களை சிட்சிப்பேன் என்றார். ரெகொபெயாம் முதியவர்களின் ஆலோசனையைக் கைவிட்டு, தன் கெட்ட நண்பர்களின் ஆலோசனையின் படி அவர்களிடம் பேசினார். ராஜா தங்களுக்கு செவி சாய்க்கவில்லை என்பதை அறிந்து இஸ்ரவேலின் பத்து கோத்திரங்கள் ரெகொபெயாமுக்கு எதிராக கலகம் செய்து சுதந்திரமடைந்தனர் (1 இராஜா. 12:1-15).



**அன்பான வாலிபர்களே! நண்பர்களின் ஆலோசனையின்படி நடந்து கொண்டதால் அவரது இராஜ்யத்தின் பெரும்பகுதியை இழக்க வழிவகுத்தது. மாய்மாலமான அன்போடு, கலகத்தை ஏற்படுத்தும் நண்பர்களை, நல்வழியில் நடத்த உதவி செய்கிறீர்களா?**

நிகழ்வு: சதீஷ்

# திருச்சபையின் எழுப்புதல்!

எழுப்புதல் என்ற வார்த்தை சமீப நாட்களாக பிரபலமாகி வருகிறது. எழுப்புதல் என்பது தேவன் சபையை சுத்திகரித்து பாவத்திலும், சாபத்திலும் விழுந்து போன தம்முடைய ஜனங்களை மீண்டும் தம் பக்கம் திருப்புவது ஆகும். உங்களுக்கு புரியும்படி சொல்ல வேண்டுமானால் தேவ பிரசன்னத்தின் மேல் தாகத்தையும், தேவன் மேல் அளவற்ற அன்பையும், பாவத்தின் மேல் வெறுப்பையும், வேத வசனத்தின் மேல் வாஞ்சையையும் உண்டாக்குவது எழுப்புதல் ஆகும். ஆதி திருச்சபை விசுவாசிகள் மீது எழுப்புதல் அக்கினி போடப்பட்டபோது ''அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய்த் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள் தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணி, தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள்...'' (அப். 2:46,47).



இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்து 50 நாட்களுக்கு பின்னர் வந்த பெந்தெகொஸ்தே நாளே சபை பிறந்த நாளாகும். இதன் மூலம் பூமியில் பரலோக ராஜ்யம் நிறுவப்பட்டது. ஆதி அப்போஸ்தலர்கள் மூலமாக சீஷர்கள் தொகை பெருகியது. பின்னர் இவர்களே கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டனர். ''இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையில் சேர்த்துக் கொண்டு வந்தார்'' (அப் 2:47). ஒரு பக்கத்தில் சபைகளுக்கு உபத்திரவம் ஏற்பட்டாலும் மறுபக்கத்தில் சபைகள் வளர்ந்து பெருகியது. ஆதி அப்போஸ்தலர்கள் மூலமாக எழுப்புதல் அக்கினி தேசங்களுக்குள் பரவ ஆரம்பித்தது. 16ம் நூற்றாண்டில் மார்டின் லூத்தர் மூலமாக ஜெர்மன் தேசத்தில் மாபெரும் எழுப்புதல் உண்டானது. பாரம்பரியத்தினால் அல்ல, ''விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்'' என்ற முழக்கத்துடன் சீர்த்திருத்த சபை (Protestant Church) பிறந்தது. இவர் மூலமாக சபைக்குள் பல மாற்றங்கள் ஏற்பட்டது. ஏராளமானோர் கர்த்தர் பக்கம் திருப்பப்பட்டனர். இவர் நாட்களில் சபைகள் வெகு வேகமாக விருத்தியடைந்தது.

1904ஆம் ஆண்டு ஈவான் ராபர்ட்ஸ் உள்ளிட்ட 16 வாலிபர்கள் திருச்சபையில் ஜெபித்துக் கொண்டிருந்த போது ஒரு மாபெரும் எழுப்புதல் வெடித்து சிதறியது. இந்த எழுப்புதல் வேல்ஸ் தேசத்தின் மூலை முடுக்கெல் லாம் பற்றி எரிந்தது. இந்தத் திருச்சபை எழுப்புதலின்

மூலம் உண்டான மாற்றங்கள் என்னவென்று உங்களுக்கு தெரியுமா? மதுக்கடைகள், களியாட்ட விடுதிகள் (Clubs), நாடகக் கூடங்கள் (Cinema Theatre) மூடப்பட்டன. அரசியல் கூட்டங்கள் ஆட்களின்றி நடந்தது, சபைகளுக்குள்ளே கூட்டம் அலை மோதியது. வேல்ஸ் தேசம் முழுவதும் கிறிஸ்துவின் தொனி ஒலித்துக் கொண்டே இருந்தது.





இது மட்டுமின்றி 20ம் நூற்றாண்டில் வில்லியம் சீமோர் என்ற தேவ மனிதன் மூலமாக லாஸ் ஏஞ்சல்ஸ் நகரிலுள்ள அசுசா தெருவில் உள்ள ஒரு சபையில் ஜனங்கள் கூடி இருந்த போது சடுதியில் எழுப்புதல் அக்கினி போடப்பட்டு அந்த பட்டணம் முழுவதும் எழுப்புதல் அக்கினி பரவியது. இதன் விளைவாக அநேக நாடுகளில் பெந்தெகொஸ்தே சபைகள் உருவானது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு முன்பாக இந்தப் பூமியில் கடைசி கால எழுப்புதலின் அக்கினியை (End Time Revival) பரிசுத்த ஆவியானவர் சபைகள் மீது போட ஆரம்பித்து உள்ளார். உலகம் எங்கும் இந்தக் கொரோனா கொள்ளை நோயின் நாட்களில் திரளான ஜனங்களும், திருச்சபையும் சுத்திகரிக்கப்பட்டு ஏராளமானோர் கர்த்தர் பக்கம் திருப்பப்பட்டு உள்ளனர். இந்தக் கொள்ளை நோயின் நாட்களில் இந்தியாவிலும் திரளான ஜனங்கள் கர்த்தர் பக்கம் திரும்பி உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



எனக்கன்பான வாலிபர்களே கடைசி கால எழுப்புதல் இந்தியாவிலிருந்து குறிப்பாக தமிழகத்திலிருந்து உலகம் முழுவதும் பரவப் போகிறது என்பது எவ்வளவு மகிழ்ச்சியான செய்தி. நீங்களும் ஈவான் ராபர்ட்ஸ்யைப் போல வாலிபர்களாக இணைந்து உங்கள் சபைகளில் ஜெபிக்கும் போது ஆதி அப்போஸ்தலர்கள் நாட்களில் நடந்தது போல நம் தேசத்திலும் "…சபைகள் சமாதானம் பெற்று, பக்திவிருத்தியடைந்து, கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தோடும், பரிசுத்த ஆவியின் ஆறுதலோடும் நடந்து பெருகின" (அப். 9:31) என்ற கர்த்தரின் வார்த்தை நிச்சயம் நிறைவேறும் என்பதில் சந்தேகம் இல்லை. இந்த எழுப்புதலின் அக்கினி திருச்சபைகள் மீது ஊற்றப்படும்போது சபைக்குள் காணப்படும் பிரிவினைகள், சமய பாகுபாடுகள், லஞ்சம், ஊழல் போன்றவை நீக்கப்பட்டு சிறுவர்கள், வாலிபர்கள், பெரியோர்கள் பல மணி நேரம் ஜெபிக்கிறவர்களாக எழும்புவார்கள். இது இப்பொழுதே ஆரம்பித்து விட்டது என்பதை நம் கண்களால் காண முடிகிறது. கடைசி கால எழுப்புதலில் கர்த்தர் வாலிபர்களையும், சிறு பிள்ளைகளையும் அதிகமாக பயன்படுத்துவார். ஆகையால் உங்கள் மூலமாக திருச்சபையிலும், தேசத்திலும் எழுப்புதல் அக்கினி பரவ போகிறது என்ற விசுவாசத்துடன் இன்றே ஜெபிக்க ஆரம்பியுங்கள்.

தொடரும்…

ஜெபம்: எஸ்தர்

# ஜெபக்கையேடு

*பிப்ரவரி 2022*

## இளஞ்சிறார் குற்றவாளிகள்

▶ இளஞ்சிறார் குற்றவாளிகள் அதிகமுள்ள மாநிலங்கள் பட்டியலில் தமிழகம் 4வது இடத்திற்கு உயர்ந்துள்ளது. கஞ்சா, போதைக்காக ரவுடிகளுடன் சேர்ந்து 367 கொலைகள் செய்த சிறுவர்கள்.

▶ கடந்த 2016-2021 காலக்கட்டத்தில் கொலை, கொலை முயற்சி, ஆள் கடத்தல், திருட்டு, வழிப்பறி உள்ளிட்ட சம்பவங்கள் அதிகமாக நடந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

▶ இளஞ்சிறார் குற்றவாளிகளின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு இரண்டு மடங்கு அதிகரித்து வருகிறது. இந்தியாவில் இளஞ்சிறார் குற்றவாளிகள் அதிகமுள்ள மாநிலங்களில் டெல்லி முதல் இடத்தில் உள்ளது

▶ ஏழ்மையான குடும்பத்தை சேர்ந்த சிறுவர்களை தேர்வு செய்து, பணம் கொடுத்தும் மதுபழக்கத்திற்கு உட்படுத்தியும், சிகரெட் மற்றும் கஞ்சா பழக்கத்திற்கு அடிமையாக்கி அவர்களை கொலை செய்யும் அளவிற்கு தயார்படுத்துகின்றனர்.



### ஜெபக்குறிப்புகள்

1 இந்தியாவில் உள்ள இளஞ்சிறார்களுக்கு கர்த்தருடைய பாதுகாப்பும், தெய்வீக ஞானமும் உண்டாக ஜெபிப்போம்.

2 இந்தியாவில் கஞ்சா, போதைக்காக கொலை செய்யத் தூண்டும் ஆவிகள் கட்டப்பட ஜெபிப்போம்.

3 கடந்த 5 வருடங்களில் ரவுடிகளுடன் சேர்ந்து 367 கொலைகள் செய்த சிறுவர்கள் மனந்திரும்பி, இந்தப் பாவப் பிடியிலிருந்து வெளிவர ஜெபிப்போம்.

4 கஞ்சா, போதைக்கு அடிமையான சிறார்களை ரவுடிகள் தங்கள் ஆதாயத்திற்காக பயன்படுத்தி வருவது தடுக்கப்படவும் ரவுடிகள் மனந்திரும்பவும் ஜெபிப்போம்.

5 போதை பொருட்கள் தடையின்றி விற்கப்பட்டதால் சிறுவர்கள் அதிகளவில் போதைப் பழக்கத்திற்கு அடிமையாகி குற்ற சம்பவங்களில் ஈடுபடுகின்றனர். போதை பொருட்கள் தடை செய்யப்பட ஜெபிப்போம்.

6 சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்படவும், இளஞ்சிறார்கள் கொலை மற்றும் கொள்ளை சம்பவங்களில் ஈடுபடாமல் தடுக்கப்பட ஜெபிப்போம்.

7 இளஞ்சிறார்களை எழுப்புதலின் திட்டத்திலிருந்து வழிவிலக செய்யும் பொல்லாத ஆவிகள் கட்டப்பட ஜெபிப்போம்.

## வேலை இழப்பு

▶ கொரோனா அச்சத்தால் 2022க்குள் 30 லட்சம் பேர் வேலை இழக்க வாய்ப்புள்ளதாக தெரிவிக்கிறது. 2020ம் ஆண்டு ஜனவரியில் எடுக்கப்பட்ட ஆய்வில் இந்தியா முழுவதும் 2022ம் ஆண்டு இறுதிக்குள் 30 லட்சம் பேர் ஐ.டி. வேலை இழக்க நேரிடும் என்று கூறப்படுகிறது.

▶ இதில் பெங்களூரில் சுமார் 10 லட்சம் முதல் 13 லட்சம் பேர் வேலை இழக்க வாய்ப்பு உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்திய அளவில் உள்ள ஐ.டி. நிறுவனங்கள் ரூ. 7.5 லட்சம் கோடி வரை சேமித்து இருப்ப தாக கூறப்படுகிறது.

▶ இந்தியா முழுவதும் 1.60 கோடிக்கும் அதிகமானவர்கள் வேலை பார்த்து வருகின்றனர். இவர்களில் 90 லட்சம் பேர் ஐ.டி நிறுவனம், கால்சென்டர் ஆகிய நிறுவனங்களில் வேலை பார்த்து வருகின்றனர்.

### ஜெபக்குறிப்புகள்

1 ஐ.டி. நிறுவனங்களில் பணிபுரியும் 30 லட்சம் பேருக்கு வேலை இழப்பு ஏற்படாமல், வேலை வாய்ப்பு வழங்கப்பட ஜெபிப்போம்.

2 வேலை இழப்பால் 30 லட்சம் குடும்பங்கள் பாதிக்கப்படுவது, தடுக்கப் படவும், குடும்பங்களில் சமாதானம் உண்டாகவும் ஜெபிப்போம்.

3. இந்தியா முழுவதும் ஐ.டி. நிறுவனத்தில் வேலை பார்த்து வரும் 1.60 கோடி பேரின் வேலைகளில் எந்த பிரச்சனைகளும் இல்லாமல், தொடர்ந்து வேலை வாய்ப்புகள் வழங்கப்பட ஜெபிப்போம்.

4 பெங்களூரில் பணிபுரியும் 70 லட்சம் பேரில் 13 லட்சம் பேர் வேறு வேலை தேடி வருகின்றனர். இவர்களுக்கு நல்ல வேலைகள் கிடைக்கப்பெற ஜெபிப்போம்.

5 வேலை இழந்ததினால் தவறான முடிவுகள் எடுக்காதபடிக்கும், குடும் பங்களில் சமாதானமற்ற சூழ்நிலைகள் மாறவும் ஜெபிப்போம்.

6 ஐ.டி. நிறுவனங்களில் வேலை பார்த்து வரும் இளைஞர்களின் மனஅழுத்தங்கள், பயங்கள் விலகவும் ஜெபிப்போம்.

7 படித்து வேலைக்காக காத்திருக்கும் வாலிபர்களுக்கு தகுந்த வேலைகள் கிடைத்து, அவர்கள் வாழ்க்கை தரம் உயர்த்தப்பட ஜெபிப்போம்.



## தற்கொலை

▶ கடந்த மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து குழந்தைகள் தற்கொலை அதிகரித்து வருகிறது என தேசிய குழந்தைகள் குற்றத் தடுப்புப் பிரிவு தகவல் அளித்துள்ளது. சமீப காலங்களில் குழந்தைகள் கடத்தல், குழந்தைகள் பாலியல், அத்து மீறல் உள்ளிட்ட குற்றச் சம்பவங்கள் அதிக அளவில் உலக நாடுகளில் அரங்கேறி வருகின்றன. இதனால் குழந்தைகள் பலர் தற்கொலை செய்து கொள்ளும் நிலைக்கு தள்ளப்படுகிறார்கள்.

▶ கடந்த 2018ம் ஆண்டு 9 ஆயிரத்து 413 குழந்தைகளும், 2019ம் ஆண்டு 18% அதிகரித்து 9 ஆயிரத்து 613 குழந்தைகளும், 2020ம் ஆண்டு 11,396 குழந்தைகள் தற்கொலை செய்து கொண்டதாக தகவல் வெளியாகியுள்ளது. 2021ம் ஆண்டு நாள் ஒன்றுக்கு சராசரியாக 31 குழந்தைகள் மரணமடைந்ததாக அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

▶ 18 வயதுக்கு கீழ் உள்ள பதின் பருவத்தினர், சிறுவர்கள், குழந்தைகள் உள்ளிட்டோர் குடும்ப பிரச்சனைகள், காதல் தோல்வி, நோய் தாக்கம் ஆகியவற்றின் காரணமாக மரணமடைகின்றனர். போதை பொருள், வேலையின்மை, கருத்தரிக்க இயலாமை போன்ற காரணங்களினால் இறப்பதாக தெரிய வந்துள்ளது. இந்தியாவில் ஒருமணி நேரத்திற்கு ஒரு குழந்தை இறப்பதாக ஆய்வு கூறுகிறது.

▶ நாடு முழுவதும் கடந்த ஆண்டில் மட்டும் 12,500 மாணவர்கள் தற்கொலை செய்துள்ளனர். இதில் 6,598 பேர் தமிழ்நாடு, மஹாராஷ்டிரா, ஜார்கண்ட், ஒடிசா, மத்திய பிரதேசம் மற்றும் கர்நாடகா மாநிலங்களை சேர்ந்தவர்கள்.

## ஜெபக்குறிப்புகள்



1 ஒருமணி நேரத்திற்கு ஒரு குழந்தை இறக்கும் அவல நிலை மாறவும், குழந்தைகள் இறப்பு குறைக்கபடவும், குழந்தைகள் பாதுகாக்கப்படவும் ஜெபிப்போம்.

2 நாள் ஒன்றுக்கு 31 குழந்தைகள் மரணமடைவது தடுக்கப்பட ஜெபிப்போம்.

3 பதின் பருவத்தினர் மற்றும் சிறுவர்கள் காதல் தோல்வி, நோய், குடும்பப் பிரச்சனைகள் காரணமாக தற்கொலை செய்து கொள்கிறார்கள். எந்த சூழ்நிலையையும் மேற்கொள்ளும் தைரியம் குழந்தைகளுக்கு உண்டாக ஜெபிப்போம்.

4 குழந்தைகளை குறிவைத்து தாக்கும் தற்கொலையின் ஆவிகள் கட்டப்படவும், சாத்தானின் தந்திர வலைக்குள் சிக்கிக் கொள்ளாத படி ஜெபிப்போம்.

5 குழந்தைகளுக்கு மனதைரியமும், நம்பிக்கையும் உண்டாக ஜெபிப்போம்.

6 மன அழுத்தம், படிப்பை குறித்த பயம், எதிர்காலத்தைக் குறித்த பயம், விரக்தி போன்ற காரணங்களால் தற்கொலை முயற்சி செய்யும் குழந்தைகள் அதிலிருந்து விடுபட ஜெபிப்போம்.

7 பள்ளிகளில் குழந்தைகளுக்கு மன அழுத்தத்தை போக்க விழிப்புணர்வு வகுப்புகள் நடத்த அரசு நடவடிக்கை எடுக்க ஜெபிப்போம்.

## எழுப்புதல்

1 எல்லா திருச்சபைகளிலும் எழுப்புதல் அக்கினி ஊற்றப்படவும், அந்த அக்கினி தேசமெங்கும் பற்றி எரிய ஜெபிப்போம்.

2 எல்லா திருச்சபைகளும், சுவிசேஷத்தை அறிவிக்கிற சபைகளாக மாறவும், குழந்தைகள், வாலிபர்கள், பெண்கள், மூப்பர்கள் கர்த்தருக்காக எழும்பி பிரகாசிக்க ஜெபிப்போம்.

3 சபைகளுக்குள் ஆவியானவரின் வல்லமை ஊற்றப்படவும், சபைகள் மறுரூபமடையவும் ஜெபிப்போம்.

4 திருச்சபைகளுக்குள் ஜெப ஆவி ஊற்றப்படவும், ஆதி திருச்சபைகளைப் போல மாறவும் ஜெபிப்போம்.

5 தேவன் விரும்பும் சுத்திகரிப்பு சபைகளிலும், ஊழியங்களிலும் உண்டாக ஜெபிப்போம்.

6 சபைகள் மற்றும் ஊழியங்கள் எழுப்புதலுக்கு ஆயத்தமாக்கப்படவும், எழுப்புதல் தரிசனம் உண்டாகவும் ஜெபிப்போம்.

7 விசுவாசிகளை வஞ்சிக்கும்படி எழும்பும் கள்ள ஊழியர்கள், தீர்க்கதரிசிகள் மற்றும் போதகர்கள் முடக்கப்பட ஜெபிப்போம்.



# RED ⚠ ALERT

நிகழ்வு: காலேப்

''ரெட் அலர்ட்'' என்ற வார்த்தையை சமீப நாட்களில் குறிப்பாக மழைக் காலங்களிலும், புயல் சின்னம் உருவாகும் போதும் இந்த வார்த்தைகளை அடிக்கடி நாம் செய்திகளிலும், சமூக வலைத்தளங்களிலும் அதிகம் கேள்விப்படுகிறோம். எதற்கு இந்த ரெட் அலர்ட்? புயலின் ஆக்ரோஷத்தையும், மழையின் வேகத்தையும் முன்னறிந்து, ஜனங்களை எச்சரித்து, பெரிய ஆபத்திலிருந்து அவர்களை காப்பதற்காகவே அது பயன்படுகிறது. ஒருவேளை அந்த எச்சரிப்பின் சத்தம் ஒலிக்காமல் போனாலோ அல்லது சத்தத்தைக் கேட்க தவறினாலோ பெரிய ஆபத்தையும், சேதத்தையும் சந்திக்க நேரிடும்.

நம் ஆவிக்குரிய வாழ்க்கைக்கூட இப்படித்தான் இருக்கிறது. ஜெப வாழ்க்கை, வேத வாசிப்பு, பரிசுத்தம் மற்றும் தேவ சித்தத்தை நிறைவேற்றுவது போன்ற காரியங்கள் நன்றாக தான் போய்க் கொண்டிருக்கும், ஆனால் சிறிய அசதி, சோர்வு, கவன குறைவு, கீழ்ப்படியாமை பெரிய ஒரு தோல்வியையும், ஆவிக்குரிய பின்மாற்றத்தையும் கொண்டு வந்து விடுகிறது. சிலர் அதை மேற்கொண்டு வெளியே வந்து விடுகிறார்கள். ஆனால் பல வாலிபர்கள் அந்த தோல்வியில் சிக்கி தங்கள் பரிசுத்தத்தை, அழைப்பை மற்றும் தரிசனத்தை இழந்து எழும்ப முடியாமல் நிலைகுலைந்து விடுகின்றனர்.

இதேபோல் தான் வேதாகமத்தில், தேவனுக்காக பெரிய காரியங்களை செய்ய அழைக்கப்பட்டவர்கள். அவர்கள் செய்த சிறிய தவறினாலும், பொருளாசை மற்றும் உலக ஆசைக்கு இடம் கொடுத்தபடியினால் தேவ மகிமையை இழந்து போனார்கள். இப்படி தேவனால் அழைக்கப்பட்டு பின்பு தேவ மகிமையை இழந்தவர்களைக் குறித்து, இந்த ரெட் அலர்ட் தொடரின் மூலம் ஒவ்வொரு மாதமும் தியானிக்க போகிறோம். அவர்கள் தவறிய, தடுமாறிய சூழ்நிலையை நாம் நிதானித்து, நம்மை நாம் சரி செய்து கொள்ள போகிறோம். நீங்கள் தேவனுக்கு பிரியமில்லாத வாழ்க்கை வாழ்பவராக இருந்தால் இந்த தொகுப்பு உங்களுக்கான ஒரு ரெட் அலர்ட்.

இந்தப் பகுதியில் நாம் தியானிக்க போகிற நபர் ஆகான். கர்மியின் மகனான இவர் யூதா கோத்திரத்தைச் சேர்ந்தவர். யுத்தத்தில் இஸ்ரவேல் தேசத்தின் தோல்விக்கு முக்கிய காரணமாக இருந்தவர். அவன் அப்படி என்ன செய்தான்?


## மேலானதை நாடாமல் உலகத்தையும் அதின் ஆசையையும் தேடினான்

எகிப்திலிருந்து புறப்பட்ட அநேகர் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்திற்குள் போக முடியவில்லை. ஆனால் ஆகானுக்கு அந்த கிருபை கிடைத்தது. கானான் தேசத்திற்குள் நுழைந்தது மாத்திரமல்ல, யோர்தானை கடக்கவும், எரிகோ மதிலை இடிக்கவும் அவனை பயன்படுத்தினார். இவ்வளவு பெரிய தேவ மகிமையையும், வல்லமையையும் பார்த்தும், தேவன் எடுக்க கூடாது என்று கட்டளையிட்ட பின்பும் பாபிலோனின் சால்வையையும், 200 வெள்ளி சேக்கலையும், 50 சேக்கல் நிறையான பொன்பாளத்தையும், ஆகானுடைய கண்கள் கண்டது. அதை அவன் இச்சித்து எடுத்து கொண்டான். அதினால் தேவ கோபம் இஸ்ரவேல் தேசத்தின் மீது பற்றி எரிந்தது, அதனிமித்தம் ஆயீ பட்டணத்தை மேற்கொள்ள முடியாமல் இஸ்ரவேலர்கள் பெரிய தோல்வியை சந்தித்தார்கள்.



## மனந்திரும்ப கிடைத்த வாய்ப்பை தவறவிட்ட ஆகான்

பின்பு தேவன் யோசுவாவை நோக்கி சாபத்தீடானதை உங்கள் நடுவிலிருந்து நிக்கிரகம் பண்ணுங்கள் என்று கட்டளையிட்டார். பாவம் செய்தவனை கண்டுபிடிக்க இஸ்ரவேல் ஜனங்கள் அனைவரையும் கோத்திரம் கோத்திரமாகவும், வம்சம் வம்சமாகவும், குடும்பம் குடும்பமாகவும், பேர் பேராகவும் வர வேண்டும் என்று கட்டளைக் கொடுத்தார். ஏன் நேரடியாக ஆகானின் பெயரை சொல்லாமல் ஒவ்வொரு கோத்திரமாக வரச் சொன்னார். அது தான் தேவன் ஆகானுக்கு மனந்திரும்ப கொடுத்த வாய்ப்பு. ஆனால் அந்த வாய்ப்பை பயன்படுத்தி கொள்ளாமல் தன் இருதயத்தை கடினப்படுத்தினபடியால் அவன் குடும்பத்தோடு சங்கரிக்கப்பட்டான்.



**தாமதமான மனந்திரும்புதல்**

ஆகான் மனந்திரும்பாமல் தன் இருதயத்தை கடினப்படுத்தினபடியால் அவன் பேரில் சீட்டு விழுந்தது. ஆகான் இந்த பாவத்தை செய்தான் என்று வெளிப்படுத்தப்பட்ட பின்பு ஆகான் தன் பாவத்தை அறிக்கை செய்தான் (யோசுவா 7:20,21). ஆனால் தேவன் அவனுக்கு இரங்காமல் அவனையும், அவன் குடும்பத்தையும் அழித்து விட்டார். தாமதமான மனந்திரும்புதல் பிரயோஜனமற்றது. அது நம்மை அழித்து விடும். ஒருவேளை முதல் கோத்திரம் வரும்போதே அவன் மனந்திரும்பி தன் பாவத்தை அறிக்கை செய்திருந்தால் தேவனிடம் இரக்கமும், மன்னிப்பும் கிடைத்திருக்கும்.



**அன்பான வாலிபர்களே! நாம் எழுப்புதலுக்கு மிக அருகில் வந்து விட்டோம். எழுப்புதலின் வாசனை இப்போதே வீச ஆரம்பித்து விட்டது. உலகத்தை அசைக்கும் ஒரு பெரிய எழுப்புதலுக்காக தேவன் நம்மை தெரிந்து கொண்டிருக்கிறார். இப்படிப்பட்ட பெரிய அழைப்பை பெற்ற நாம், அதில் நிலைத்திருக்க கவனமாகவும், எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும். உலகத்தை பார்த்து அதின் காரியங்களை இச்சித்து அதை பின்பற்றினோமானால் நம் அழைப்பையும், தரிசனத்தையும் இழந்து போவோம். எனவே வேத வசனத்தின் மூலம், தேவ ஊழியர்களின் மூலம் நமக்கு வரும் எச்சரிப்பின் சத்தத்தைக் கேட்டு நாம் ஓட்டத்தை ஓட வேண்டும். நம்மை நோக்கி வரும் ஒரு எச்சரிப்பின் சத்தம் தேவன் கிருபை அனுப்பும் Signal Red Alert.**

அடுத்த பகுதியில் அடுத்த Red Alert குறித்து தியானிப்போம்.


இயேசு விடுவிக்கிறார்

வாலிபர் உலகம்

Sathiyam TV YouTube Comforter DIGITAL CHANNEL

சத்தியம் TV சனிக்கிழமை 6:30am

7 மணிக்கு Youtube மற்றும்

COMFORTER TVயிலும் பார்க்கலாம்

வாலிபர்களே! உங்கள் நண்பர்களுக்கும்

அதுமட்டுமல்லாமல் இந்நிகழ்ச்சி மூலம்

அறிமுகப்படுத்துங்கள். நீங்கள் பெற்றுக் கொண்ட

ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!

9750955547




WE'RE GOING LIVE

FEB. 27TH 3 TO 5PM - SUNDAY

IGNITERS, MONTHLY YOUTH FELLOWSHIP IS TELECASTED LIVE ONLINE IN YOUTUBE AND FACEBOOK ON LAST SUNDAY OF EVERY MONTH

Message and Prayer:

Bro. Mohan C. Lazarus



ஊழிய பயணம்: வயலா

# Petra

## பேதுருவோடு ஒரு பயணம்...

இயேசு கிறிஸ்துவின் பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் பிரதானமானவர் பேதுரு என்னப்பட்ட சீமோன். இயேசுவானவர் இராமுழுவதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்து, பொழுது விடிந்த பின், தன் சீஷர்களைத் தெரிந்தெடுகிறார். அவர்களுள் முதலாவது தெரிந்தெடுக்கப்படும் சீடனே, யோனாவின் குமாரனாகிய சீமோன் ஆவார் (லூக்கா 6:12-14). இந்த சீமோனையே இயேசு 'கேபா' என்கிறார். கேபா என்பதற்கு 'பேதுரு' என்று அர்த்தமாம் (யோவான்1:42 பேதுரு என்ற வார்த்தை 'பெட்ரோஸ்' (**Petros**) என்ற கிரேக்க வார்த்தையைத் தழுவியதாகும். கிரேக்க மொழியில் 'பெட்ரா' (**Petra**) என்றால் 'கல்' என்று பொருளாம். பேதுருவின் பெயரை புதிய ஏற்பாட்டில் சுமார் 210 முறை காண முடியும். பவுலின் பெயர் சுமார் 162 முறையும், பிற அப்போஸ்தலர்களின் பெயர்கள் மொத்தமாக சுமார் 142 முறை காண முடியும் என்று சொல லோவிய வேதாகமம் குறிப்பிடுகிறது. பேதுரு கலிலேயா நாட்டுப் பெத்சாயிதா ஊரைச் சேர்ந்தவர் (யோவான் 1:44, 12:21). இவர் திருமணமானவர் (2 கொரி. 9:5). இவர் மீன்பிடித் தொழிலை செய்து வந்தவர்.

பேதுருவின் சகோதரனாகிய அந்திரேயா தான், பேதுருவை இயேசுவிடம் கூட்டிக் கொண்டு வந்ததாக யோவான் சுவிசேஷம் தெரிவிக்கிறது (யோவான் 1:42). பல நூற்றாண்டுகளாக யூதர்கள் மேசியா வர வேண்டும் என்று வேண்டிக் கொண்டிருக்கின்றன. ஆனால் யோவான் கூறியவுடன் விசுவாசித்து, ஏற்றுக் கொண்டு உடனே இயேசுவே, கிறிஸ்து (மேசியா) என்று இயேசுவின் காலத்திலேயே அறிக்கையிட்டவர் சீமோன் பேதுருவின் சகோதரனாகிய அந்திரேயா ஆவார் (யோவான் 1:40,41).

### பேதுருவின் அழைப்பு

கின்னரேத் / கெனசரேத்து / திபேரியா அல்லது கலிலேயா என்னப்படும் கடல், மத்திய தரைக் கடலின் மட்டத்திலிருந்து சுமார் 200 மீட்டர் தாழ்வாக உள்ளது. இதன் நீளம் 21 கி.மீட்டர், அகலம் 13 கி.மீட்டர், ஆழம் 45 மீட்டர் ஆகும். இங்கு மிகுதி யான மீன்கள் உண்டு. இயேசு பேதுருவுக்கு ஊழிய அழைப்பு கொடுத்தது. இந்த கலிலேயாவின் கடற்கரையே ஆகும். இயேசு கலிலேயாக் கடலோரமாய் நடந்து போகையில் மீன் பிடிக்கிறவர்களாயிருந்த இரண்டு சகோதரராகிய பேதுரு என்னப்பட்ட சீமோனும், அவன் சகோதரன் அந்திரேயாவும் கடலில் வலை போட்டுக் கொண்டிருந்தார்கள். இயேசு அவர்களைக் கண்டு என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார். அதுவே இயேசு - பேதுருவின் முதல் சந்திப்பு ஆகும் (மத்தேயு 4:18-20). இயேசுவின் அழகிய சாந்தமான முகம், கனிவான பார்வை மெல்லிய சத்தம் பேதுருவை மிகவும் ஈர்த்து விட்டது.



தனது மீன்பிடித் தொழிலின் மூலதனமான வலைகளையும் கூட அப்படியே விட்டு விட்டு மாறுத்தரம் ஒன்றும் சொல்லாமல், சாக்குபோக்கு சொல்லாமல் உடனே இயேசுவை பின்பற்றி செல்கின்றனர் சகோதரர்கள். இன்று இப்படியொரு உன்னத அழைப்பு இயேசு கிறிஸ்து உங்களுக்கு கொடுத்தால், உங்கள் பதில் தான் என்ன?

## பேதுருவின் அர்ப்பணிப்பு

அர்ப்பணம் என்பது ஏதோ ஒரு வேண்டாத ஒன்றை இழப்பது அல்ல. மிகவும் தேவை எனத் தோன்றும் எதையும் விட்டு விடத் துணிவது கிறிஸ்துவை பின்பற்றுதல் என்பது பாக்கியம் தான், சந்தேகமில்லை. ஆனால் அதற்காக இங்கு பேதுரு தனது மீன்பிடித்தொழிலையும் அதன் மூலம் ஈட்டப்படும் வருமானத்தையும் இழக்கும் சூழ்நிலை உண்டானது. பேதுருவுக்கு மனைவி உண்டு, மாமியும் உண்டு. குடும்பத்திற்கு இவரால் ஈட்டப்படும் வருமானம் மிகவும் அவசியமானது. இருப்பினும் இயேசுவின் அழைப்பை ஏற்று தைரியமாய் தன் தொழிலையும் விட்டு இயேசுவின் பின் செல்ல தன்னை அர்ப்பணிக்கிறார். லூக்கா சுவிசேஷத்தில் பேதுரு முதலாவது தனது படகை இயேசுவுக்கு கொடுத்திருந்ததை வாசிக்கிறோம் (லூக்கா 5:3).



அந்தப் படவில் உட்கார்ந்து இயேசுவானவர் ஜனங்களுக்கு போதகம் பண்ணினார். போதகம் பண்ணி முடித்தவுடன், இயேசு சீமோனிடம் ஆழத்திலே தள்ளிக் கொண்டு போய் வலைகளை போடச் சொல்கிறார். இராமுழுவதும் பிரயாசப்பட்டும் ஒன்றும் கிடைக்கவில்லை என்று மனச் சோர்வுற்றிருந்தாலும், இயேசுவின் வார்த்தைகளுக்கு முழு மனதோடு கீழ்ப்படிகிறார். விளைவு, வலைகள் கிழிந்து, இரண்டு படவுகளும் அமிழத்தக்கதாக மீன்கள் பேதுருவுக்கு கிடைத்தது. பேதுரு தன்னுடைய வெறுமையான படகை இயேசுவின் ஊழியத்திற்கு பயன்படுத்த விட்டுக் கொடுக்கிறார். அதற்கு பலனாக, இரண்டு படவுகள் நிறைய ஆசீர்வாதம். இன்று இயேசுவின் ஊழியத்திற்கு நீங்கள் கொடுப்பது தான் என்ன? உங்கள் சம்பாத்தியமோ? நேரமோ? திறமையோ? தாலந்தோ? எதுவாயிருப்பினும் அவருடைய இராஜ்ஜிய மேன்மைக்கு அர்ப்பணிக்க ஆயத்தமா?



## பேதுருவின் வீட்டில் இயேசுவுக்கு இடம்

இயேசு சீமோனுடைய வீட்டில் பிரவேசித்தார். சீமோனுடைய மாமி ஜுரமாய் கிடப்பதை இயேசு அறிகிறார். இயேசு கிட்டப் போய், அவள் கையைப் பிடித்து அவளைத் தூக்கி விட்டார். உடனே ஜுரம் அவளை விட்டு நீங்கிற்று. அவள் அவர்களுக்கு பணிவிடை செய்தாள் (மாற்கு 1:29-31). இயேசுவுக்கு வீட்டில் இடம் கொடுக்கிறார் பேதுரு, வீட்டிலுள்ள பிரச்சனைகள், பெலவீனங்கள் மறைகின்றது. உங்கள் வீட்டில் / இருதயத்தில் / வாழ்வில் இயேசுவுக்கு இடம் உண்டா? இன்று இயேசுவுக்கு இடம் கொடுப்பீர்கள் என்றால் தீர்க்க முடியாத எந்த பிரச்சனையாக இருந்தாலும் நீங்கிப் போய் விடும். விடுதலையோடு, சமாதானத்தோடு, நிம்மதியாக வாழ இயேசுவை அழையுங்கள்.

தொடரும்...



### மன அழுத்தத்திலிருந்து வெளிவர...

**போதுமான தூக்கம்:** ஒரு நாளைக்கு குறைந்தது 6 முதல் 8 மணி நேரம் கட்டாயம் தூங்க வேண்டும்.

**உடற்பயிற்சி:** தினமும் அரை மணி நேரமாவது உடற்பயிற்சி செய்வது நல்லது.

**பிடித்ததில் கவனம் செலுத்துதல்:** இசை, வரைதல், எழுதுதல் போன்ற உங்களுக்கு பிடித்த செயல்களில் நேரத்தை செலவிடலாம்

**மனம் விட்டு பேசுங்கள்:** உங்களை உற்சாகபடுத்தி, ஊக்கப்படுத்துகிறவர்களிடம் சிறிது நேரம் மனம்விட்டு பேசலாம்

**வாசித்தல்:** உங்களுக்கு பிடித்தமான ஆவிக்குரிய புத்தகங்கள் மற்றும் செய்திகளை வாசியுங்கள்.

கெத்சி கிளார்வின்

# ஜெபிப்போம் ஜெயமெடுப்போம்!



**நாம் எழுப்புதல் காலத்தில் வந்திருக்கிறோம். எழுப்புதலுக்கு மிக முக்கியமானது ஜெபம் என்பதை நன்கு அறிந்திருக்கிறோம். எனவே ஜெபத்தின் வகைகள் என்ன என்பது அறிந்து, அதன்படி ஜெபிப்பது மிகவும் நல்லது. எனவே நாம் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு விதமான ஜெபங்களைக் குறித்துப் பார்க்கப் போகிறோம்.**

## ஜெபம் என்பது என்ன?

நாம் தேவனோடு பேசுவதும், அவர் நம்மோடு பேசி பதில் கொடுப்பதுமே ஜெபம் ஒரு வகையான உரையாடல் (CONVERSATION) என்று சொல்லலாம். ஏதோ தேவ சமுகத்தில் போய் கொட்டி விடுவது மட்டுமல்ல, மாறாக விசுவாசத்தோடு இயேசுவின் வல்லமையுள்ள நாமத்தை பயன்படுத்தி நமக்காகவும் மற்றவர்களுக்காகவும் ஜெபிப்பதே ஜெபமாகும். நம் தேவைகளுக்காக மட்டும் ஜெபிக்கிறவர்களாய் நாம் காணப்பட்டால், புற இன மக்களுக்கும் நமக்கும் ஒரு வித்தியாசமும் இல்லை. இன்றைக்கும் உயிரோடே இருக்கும் நம் உன்னத தேவனிடத்தில் உரையாடும் நேரமே ஜெப மாகும்.



## ஏன் ஜெபம் அவசியம்?

அவர் சர்வல்லவர் தானே! அவருக்கு எல்லாம் தெரியுமே! எல்லா ஜனங்களையும் அவர் இரட்சிக்கலாமே! அவரால் செய்ய முடியாதா? ஏன் ஜெபிப்பது அவசியம் என்று நம்மில் சிலர் நினைக்கக்கூடும். இதற்கான பதிலை நாம் இப்பகுதியில் பார்ப்போம்!

- மனித இனம் பாவத்தில் விழுந்ததால், உலகம் பிசாசின் கையில் போய்விட்டது "....இந்த உலகத்தின் அதிபதி வருகிறான்,..." யோவான் 14:30.
- எனவே நாம் ஜெபிப்பதின் மூலம் தான் கர்த்தர் இவ்வுலகத்தில் தனது கிரியைகளை நடப்பிக்க முடியும்.
- இயேசு தேவகுமாரனாக இருந்தும் பிதாவின் சித்தம் பூமியில் நிறைவேற ஜெபிக்க வேண்டியதாயிருந்தது.
- நாம் ஜெபிக்கும் அளவிற்கு ஏற்றாற்போல்தான் கிரியைகள் நடக்கும்.

## ஜெபிக்கிற அனுபவம் இல்லாதிருந்தும் அனுதினமும் ஜெபிக்க விருப்பமுள்ளவரா நீங்கள்?

அப்படியென்றால் இயேசு நமக்கு கற்றுக்கொடுத்த ஜெபத்திலிருந்து தினமும் ஜெபிக்க துவங்குங்கள்...



- நீங்கள் ஜெபம்பண்ணவேண்டிய விதமாவது: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக;
- உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிற துபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக.
- எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்.
- எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்.
- எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும், ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென், (மத்தேயு 6:9-13) என்பதாக ஆண்டவர் ஜெபிக்கும் முறையை கற்றுக் கொடுத்திருக்கிறார்.

இன்னும் வரும் மாதங்களில் ஜெபத்தின் வல்லமை, அதின் வகைகள், எப்படியெல்லாம் ஜெபிப்பது போன்று பல காரியங்களை நாம் தொடர்ந்து பார்க்க உள்ளோம். இன்றிலிருந்தே அனுதினமும் ஜெபித்துப் பழக உங்களை அர்ப்பணித்துக் கொள்ளுவீர்களா?

சிறப்புக் கட்டுரை: ரவி

# தேவ அன்பு...

என் அன்புக்குரிய வாலிப தம்பி மற்றும் தங்கைகளுக்கு! கர்த்தருடைய பெரிதான கிருபையினாலும் இரக்கத்தினாலும், 2022ஆம் ஆண்டில் நாம் ஜீவனோடு அடியெடுத்து வைத்ததற்காய் தேவனுக்கு நன்றி. கடந்த ஆண்டு கொரோனா என்னும் கொள்ளை நோயின் நிமித்தம் அநேக ஜனங்கள் பாதிக்கப்பட்டு பலர் தங்கள் ஜீவனையும் இழந்து போக நேர்ந்தது. ஆனாலும் தேவனுடைய கிருபை நம்மைக் காத்தது. இனிமேலும் காக்கும் என்று சொல்லி நன்றியுள்ளத்தோடு, இம்மாதத் தலைப்பான ''உண்மையான அன்பு'' (True Love) என்பதைக் குறித்து ஆராய்வோம்.



நண்பர்களே, நீங்கள் உண்மையான அன்பை ருசித்ததுண்டா? உலகம் பாராட்டும் அன்பு அது உண்மையான அன்புதானா? உண்மையான அன்பு எப்படியிருக்கும் என்று நாம் எப்படி அறிந்து கொள்வது? உலகம் பொதுவாக அன்பை ஒரு உணர்ச்சியாகவே (Emotion / Feeling) பார்க்கிறது. அன்பு வெறும் உணர்ச்சியாக இருக்கும் பட்சத்தில், அவ்வன்பு நிலைத்திருப்பது எப்படிச் சாத்தியம்? காரணம், உணர்ச்சிகள் நம் சூழ்நிலைகள் சார்ந்தும், மற்ற நபர்கள் சார்ந்தும் அவ்வப்போது மாறிக் கொண்டே இருக்கும். உதாரணமாக, நீங்கள் நேசிக்கும் ஒரு நபரை சிலநேரம் அவர்களுடைய செயல்களினிமித்தம் வெறுக்கும்படியான சூழலோ, கோபப்பட வேண்டிய சூழல் ஏற்படுவது சகஜம். அப்படியான சூழலில் அன்பு வெறும் உணர்ச்சியாக இருக்கும் பட்சத்தில், அதனால் நிலைத்திருக்க முடியாது. அப்பொழுது அன்பு வெறும் ஒரு உணர்ச்சி மட்டும் அல்ல; அதற்கும் மேலாக அன்பு என்பது நீயும், நானும் தெரிந்து கொள்ளும் ஓர் தெரிந்தெடுப்பாக (Choice) இருக்கிறது. தேவன் அன்பாயிருக்கிறார் என்று வேதத்தில் நாம் வாசிக்கிறோம். அவர் அன்பாகவே இருக்கிறபடியால், தண்டனைக்கும் ஆக்கினைக்கும் பாத்திரவான்களாகிய நம்மை நேசிக்கும்படி அவர் தீர்மானித்தார். "நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்" (ரோமர் 5:8) என்று சொல்கிறது.





ஆம் நண்பர்களே, உண்மையான அன்பு சூழ்நிலைகள் எதிர்மறையாக இருந்தாலும் எதையும் எதிர்பாராமல் விரும்பத்தகாத நபரை நேசிக்க தீர்மானிக்கும். நாம் தேவனால் முற்காலத்தில் விரும்பத்தகாதவர்களாயிருந்தும், நம்மில் அன்பு கூறும்படி அவர் தீர்மானித்து, சுயநலமற்ற தம்முடைய தியாகத்தினால், சிலுவையில் இயேசு அவ்வன்பை நம்மிடத்தில் காண்பித்தார். தேவனுடைய அன்பைக் குறித்து 1 கொரிந்தியர் 13ம் அதிகாரத்தில் பவுல் மிக அருமையான வர்ணிக்கிறார். நீங்கள் அதை வாசித்து உங்களை நீங்களே பரிசோதிக்க வேண்டும்.

இப்பொழுது நமக்கு வரும் கேள்வி, இப்படியான உன்னத அன்பை நம்மால் மற்றவர்களிடம் காண்பிக்க முடியுமா? தேவனுடைய உண்மையான அன்பை நாம் ருசித்ததுண்டானால், நம்மாலும் அவ்வன்பை வெளிப்படுத்த முடியும். இயேசு கிறிஸ்துவை தங்கள் இரட்சகராகவும், கர்த்தராகவும் ஏற்றுக் கொண்ட உங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் தேவ அன்பு பரிசுத்த ஆவியானவரால் ஊற்றப்பட்டிருக்கிறது என்று ரோமர் 5:5ல் சொல்கிறது. ஆகவே, இந்த உண்மையான அன்பை நீங்கள் ருசிக்கவும், வெளிப்படுத்தவும் தேவன் உங்களை பெலப்படுத்துவாராக.

இதை வாசிக்கும் உங்களில் யாராவது, தேவனுடைய உண்மையான அன்பை இன்னும் ருசிக்கவில்லையென்றால், இப்பொழுதே மனந்திரும்பி, அவருடைய மன்னிப்பைப் பெற்று, அவரை கர்த்தராகவும், இரட்சகராகவும் ஏற்றுக் கொள்ளுங்கள். தேவனுடைய அன்பு உங்களை நிரப்பும்! ❤

# கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்

















2021ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தூத்துக்குடி, சென்னை, கோவை, திருநெல்வேலி, வேலூர், திருப்பூர், திண்டுக்கல், மணப்பாறை, கோவில்பட்டி, ஆம்பூர் மற்றும் கர்நாடக மாநிலங்களில் வசிக்கிற சுமார் 25,300 பேருக்கு கிறிஸ்துமஸ் பவனி மூலமாக, Puppet Show நடத்தி கிறிஸ்துவின் பிறப்பின் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. இது மட்டுமின்றி கிறிஸ்துமஸ் நாட்களில் அநேக ஏழை, எளிய மக்களுக்கு ஒரு மாதத்திற்கு தேவையான வீட்டு உபயோகப் பொருட்கள் கொடுத்தும், அவர்களுக்கு இயேசுவின் அன்பை வெளிப்படுத்த தேவன் கிருபை செய்தார். 1,060க்கும் அதிகமான சிறு பிள்ளைகள் மத்தியில் கிறிஸ்துமஸ் தாத்தா வேடமணிந்து இனிப்பு வழங்கி அவர்களுக்கு இயேசுவின் பிறப்பின் செய்தி தெரிவிக்கப்பட்டது. இதன் மூலம் திரளான ஜனங்களும், சிறுபிள்ளைகளும் இயேசுவின் அன்பை அறிந்து கொண்டது மட்டுமின்றி அநேக சிறு பிள்ளைகள் தங்கள் உள்ளத்தில் இயேசுவை ஏற்றுக் கொண்டனர்.
தேவனுக்கே மகிமை உண்டாவதாக.















# Spread the Revival Fire

## EVERY 1ST SUNDAY
(6th February)

**VELLORE (3 PM)**
Gethsamane Prayer Center,
9442885315 | 9786379556

**TIRUPUR (4PM - 6:30 PM)**
Gethsamane Prayer Center,
9442082200

**TIRUPATI (3PM)**
Old Community Hall,
West Church.
9985033401 | 9442885315

**TUTICORIN (3PM - 5:30 PM)**
Gethsamane Prayer Center,
9442885315

## EVERY 2ND SATURDAY
(12th February)

**MADURAI (4:30 - 6:30PM)**
Gethsamane Prayer Centre
9750955548 | 0452-2677300

## EVERY 2ND SUNDAY
(13thFebruary)

**AMBUR (3PM - 6PM)**
Concordia Hr.Sec.School,
9597927799 | 9442885315

**THANJAVUR (3:00PM)**
Gethsemane Prayer Centre,
9444381971 | 9488475315

**VILLUPURAM (3 - 6PM)**
Gethsamane Prayer Centre,
8344411022 | 9442885315

**KOVILPATTI (3PM – 5.30 PM)**
St. Paul's Matriculation School,
9750955548 | 9787322334

**ALANGULAM ( 2:30PM)**
P.M.V. Packiyavathy Building
9965377427 | 9750955548

**THENI (2.30PM - 5 PM)**
Gethsamane Prayer Center,
9750955548 | 9976766422

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!!

**SURANDAI (2.30PM)**
Jawarhalal Middle School,
Surandai.
9443962141 | 9750955548

## EVERY 3RD SUNDAY
(20th February)

**TIRUNELVELI (2:30 PM)**
Gethsamane Prayer Center
9750955548 | 9488212915

**COIMBATORE (4PM)**
Gethsamane Prayer Center,
0422 - 2309040 | 8903405315

**TRICHY (3PM)**
Gethsamane Prayer Center
9488475315

**JEBAMALAI (2PM)**
Keelamathapuram,
8300131000 | 9750955548

**MUMBAI (5PM - 8PM)**
Gethsamane Prayer Centre,
9004882470 | 9664050567

**CHENNAI (3.30PM)**
VGP Victory House, Mount Road.
9488475315

**NALUMAVADI : (3-:30PM)**
Tabernacle of God, Nalumavadi
9442885315

**DINDIGUL (3PM - 5:30 PM)**
CSI Sophia School,
9750955548 | 6383015262

**THIRUVARUR (3:30 PM)**
Gethsamane Prayer Center,
9976766322 | 7373374733

**TIRUVANNAMALAI (3:30 PM)**
A L C Lebanon compound,
9791444788 | 9865553420

**RANIPET (3 - 6P.M.)**
Gethsemane Prayer Centre,
9500283179 | 9442885315

## EVERY 4TH SATURDAY
(26th February)

**PERAMBALUR (5PM - 8 PM)**
Gethsamane Prayer Centre
9788788512

## EVERY 4TH SUNDAY
(27th February)

**PERNAMBUT (3 PM- 6 PM)**
Revival Prayer Tower,
9940854125 | 9442885315

**ERODE (4 PM - 6:30 PM)**
Gethsamane Prayer Center,
9750722000

**THIRUVALUR (2.30PM-5.30 PM)**
Gethsamane Prayer Center,
9442885315

ACHIEVERS
2022

# தேர்வு எழுதும் மாணவர்களுக்கான சிறப்புப் பிரார்த்தனை

## வேலூரில்

**மார்ச் 7, திங்கள்**
நேரம் மாலை **3 - 6**
இடம் : கெத்சமனே ஜெப மையம்
களிஞ்சூர் ரோடு, காந்தி நகர்



செய்தியும், ஜெபமும்
**சகோ. சதீஷ்**

தொடர்புக்கு:
9786379556
944256 7043

## திண்டுகல்லில்

**மார்ச் 14, திங்கள்**
நேரம் மாலை **4 - 6**
இடம் : V.G.S.மஹால், திண்டுக்கல்
பேருந்து நிலையம் அருகில்



செய்தியும், ஜெபமும்
**சகோ. அவினாஷ்**

தொடர்புக்கு:
63823 92446

## பெரம்பலூரில்

**மார்ச் 21, திங்கள்**
நேரம் மாலை **3 - 6**
இடம் : கெத்சமனே ஜெப மையம்
வெங்கடேசபுரம்,
பாங்க் ஆப் பரோடா அருகில்



செய்தியும், ஜெபமும்
**சகோ. சாம் ஜெபராஜ்**

தொடர்புக்கு:
97888 12428
9788788512

# செய்திகள்!

### இந்தியாவுக்கும் ஆபத்து

## பூடான் எல்லையில் சீனா 200 புதிய கட்டுமானங்கள்

### செயற்கைக்கோள் புகைப்படத்தில் அதிர்ச்சி தகவல்

பூடான் உடனான சர்ச்சைக்குரிய எல்லையில் ஆறு இடங்களில் சீனா 200க்கும் மேற்பட்ட புதிய கட்டுமான பணிகளை மேற்கொண்டு வருவது செயற்கைக்கோள் புகைப்படத்தின் மூலமாக அம்பலமாகி உள்ளது.

இந்திய எல்லைப் பகுதியில் சீனா மோதல் போக்கை கடைப்பிடித்து வருகிறது. இதுமட்டுமின்றி பூடான் எல்லையையும் ஆக்கிரமித்து, சீனா அட்டகாசம் செய்து வருகின்றது. அமெரிக்காவை சேர்ந்த 'ஹாக்ஐ' என்ற தரவு பகுப்பாய்வு நிறுவனம், பூடான் எல்லையில் 6 இடங்களை ஆக்கிரமித்து, 200க்கும் மேற்பட்ட கட்டுமான பணிகளை சீனா மேற்கொண்டு வருவதை செயற்கைக்கோள் மூலம் கண்டறிந்துள்ளது. சீனாவின் மேற்கு எல்லைப் பகுதியில் கடந்த 2020ம் ஆண்டில் கட்டுமான பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. 2021ம் ஆண்டில் இந்த பணிகள் விரைவுபடுத்தப்பட்டதை செயற்கைக்கோள் புகைப்படங்கள் காட்டுகின்றன. இது, இந்தியாவின் பாதுகாப்புக்கும் ஆபத்தானது. இந்நிலையில், சீனாவின் செயல் குறித்து பூடான் வெளியுறவு துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், எல்லை பிரச்சனைகள் குறித்து வெளிப்படையாக பேசக்கூடாது என்பது பூடானின் கொள்கையாகும். எனவே, இது தொடர்பாக கருத்துக்களை கூற முடியாது என்று தெரிவித்துள்ளது.

சீன வெளியுறவு துறை அமைச்சகம் தனது அறிக்கையில், தனக்கு சொந்தமான இடத்தில் கட்டுமான பணிகளை மேற்கொள்வது, சீனாவின் இறையாண்மைக்கு உட்பட்ட விவகாரம். இது, உள்ளூர் மக்களின் வேலை மற்றும் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கையாகும் என்று குறிப்பிட்டுள்ளது.

*- தினகரன், 13 ஜனவரி 2022.*

### இந்தியா சீனா 14ம் கட்ட பேச்சு

*கடந்த 2020ம் ஆண்டு கிழக்கு லடாக் எல்லைக்குள் சீன ராணுவம் ஊடுருவ முயன்றபோது மோதல் ஏற்பட்டது. இதில் 20 இந்திய வீரர்கள் வீரமரணம் அடைந்தனர். சீன தரப்பிலும் கடும் உயிர் சேதம் ஏற்பட்டது. இந்த பதற்றத்தை தணிக்கவும், படைகளை வாபஸ் பெறுவது பற்றியும் இருநாட்டு ராணுவமும் ஏற்கனவே 13 சுற்று பேச்சுவார்த்தை நடத்தியுள்ளன. இதன் பலனாக, பாங்காங் ஏரி, கோக்ரா பகுதிகளில் இருந்து படைகள் திரும்ப பெறப்பட்டன. எனினும், ஹாட் ஸ்பிரிங்ஸ் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து படைகள் விலக்கும் பிரச்சனை முடிவுக்கு கமாண்டர்களின் 14வது சுற்று பேச்சுவார்த்தை நேற்று தொடங்கியது.*

*- தினகரன், 13 ஜனவரி 2022.*



Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211



## ஜெபக்குறிப்புகள்

50 கோடி ஆத்துமாக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கும் தரிசனத்தை பெற்றிருக்கும் சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்கள், தேவ சித்தத்தை பரிபூரணமாக செய்து முடிக்க வேண்டிய கிருபையை தேவன் கொடுக்க ஜெபிப்போம்.

இந்த திட்டத்தை 2030ம் ஆண்டிற்குள் நிறைவேற்றி முடிக்க வேண்டிய விசேஷித்த ஞானம், அபிஷேகம், பெலன் மற்றும் சுகம் அருளப்படவும், தேவன் கொடுத்த அனைத்து வாக்குத்தத் தங்கள் நிறைவேற்றப்படவும், சகோதரருக்கு விரோதமாக எழும்பும் சத்துருவின் வல்லமைகள் அழிக்கப்படவும் ஜெபிப்போம்.

10 கோடி ஆத்துமாக்களுக்கு சுவிசேஷம் அறிவித்து, 1 கோடி ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த பொறுபெடுத்திருக்கும் வாலிபர் ஊழியத்தின் முழுநேர ஊழியர்கள், இந்தியா முழுவதும் இருக்கும் REVIVAL IGNITERS, மற்றும் தன்னார்வ ஊழியர்களுக்கு, இந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கான அபிஷேகமும், கிருபையும், வல்லமையும், ஆத்தும பாரமும் உண்டாக ஜெபிப்போம்.

**ஒரு கோடி** ஆத்துமாக்களை ஆதாயம் செய்வதற்கு **ஒரு கோடி மணி நேரம்** ஜெபிக்க புதிய ஜெப திட்டங்களையும், ஜெப வீரர்களையும், ஜாமக்காரர்களையும் தேவன் எழுப்பி தர ஜெபிப்போம்.

எஸ்தர் 8ஆம் அதிகாரம் 10ம் வசனத்தின்படி, ஒரு கோடி ஆத்துமாக்களுக்கு சுவிசேஷத்தை தீவிரமாக கொண்டு சென்று, நற்செய்தி அறிவிக்கும் அஞ்சர்காரர்களை தேவன் எழுப்பவும், அவர்கள் தேசத்திற்குள் அனுப்பப்படவும் ஜெபிப்போம்.

ஊடகத்தின் (தொலைக்காட்சி, சமூக வலைத்தளம் ) மூலம் சுவிசே ஷத்தை தீவிரமாக எடுத்து செல்லவும், புதிய நிகழ்ச்சிகளை தயாரிக்கவும், தேவன் புதிய திட்டங்களை கொடுக்கும்படி ஜெபிப்போம்.

**இயேசு விடுவிக்கிறார்**
**வாலிபர் ஊழியம்**

# 10 கோடி

**வாலிபர்களுக்கு சுவிசேஷம்**

# 1 கோடி

**வாலிபர்களை இரட்சிப்புக்குள் வழி நடத்த**

## 15 மணி நேர ஜெபத்திட்டம்

**தினமும் இந்த தரிசனத்திற்காக**

## 30 நிமிடம் ஜெபிப்பேன்

DAY - 1 DAY - 2 DAY - 3 DAY - 4
DAY - 5 DAY - 6 DAY - 7 DAY - 8
DAY - 9 DAY - 10 DAY - 11 DAY - 12
DAY - 13 DAY - 14 DAY - 15 DAY - 16
DAY - 17 DAY - 18 DAY - 19 DAY - 20
DAY - 21 DAY - 22 DAY - 23 DAY - 24
DAY - 25 DAY - 26 DAY - 27 DAY - 28
DAY - 29 DAY - 30

Name.............................................................

Mobile...........................................................

Place.............................................................

நீங்கள் ஜெபித்தவுடன் எங்களுக்கு photo எடுத்து 97509 55547 என்ற whatsapp நம்பருக்கு அனுப்பவும்

Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847.
Postal Registration No: TTN/26/2020-2022.
Date of Publication: 25 - 01 - 2022.
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO- 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2020-2022.

# உண்மையான அன்பின் பண்புகள்...



**அன்பு கனிவானது**
அக்கறை, இரக்கம் மற்றும் மென்மையான இதயம் கொண்டது. அது உங்கள் இன்ப துன்பங்களை உணர்ந்து கொள்ளும்.

**அன்பு பொறாமை கொள்ளாது**
எல்லாவற்றிலும் திருப்தி கொள்ளும், எல்லாவற்றிற்கும் நன்றி செலுத்தும். யார் மீதும் பொறாமை கொள்ளாது.



**அன்பு தன்னை விரும்பாதவர்களைக்கூட நேசிக்கும்**
தன்னை வெறுப்பவர்களுக்கும் நன்மையே செய்யும். நீங்கள் எதிரியாக கருதினாலும் அந்த அன்பு உங்களை நேசிக்கும்.



**அன்பு பொறுமையுள்ளது**
எந்த வலியையும் துன்பத்தையும் பொறுமையாய் சகித்துக் கொள்ளும். யாரையும் குறை கூறாது, கோபத்தை புறம்பே தள்ளும்.



**அன்பு பாதுகாக்கும்**
எப்போதும் உங்களை பாதுகாப்பதோடு, உங்கள் பாதுகாப்பையே விரும்பும்.



**அன்பு நீதியானது**
எப்போதும் சரியானதையே செய்யும். தவறுகளை தவிர்த்து, தன்னைத் தானே ஒழுங்குபடுத்தும்.



**அன்பு தன்னலமற்றது**
எப்போதும் பிறர் நலனில் அக்கறை கொள்ளும், சுய நலம் இருக்காது, பேராசை கொள்ளாது. தன்னலம் கருதாது.



**அன்பு அடக்கமுள்ளது**
பெருமை கொள்ளாது, தன் குறைகளை ஒப்புக் கொண்டு, சரிசெய்ய பாடுபடும். மற்றவர்கள் செய்த தவறுகளை எளிதில் மன்னிக்கும்.




உண்மையான அன்பு மிகவும் வலிமை வாய்ந்தது. ஆனால் அதை செயல்படுத்துவது எளிதானதல்ல. பெருந்தியாகங்களையும், நிறைய வலிகளையும் சகித்துக் கொள்ளும் போது, வாழ்விலும் நித்தியத்திலும் உண்மையான மகிழ்ச்சியையும் நிறைவையும் தருவது உண்மையான அன்பே ஆகும்.